
# மதுரை
# தமிழ்ப் புலவர்கள்



R005E05

...வரி பப்ளிஷிங் ஹவுஸ்
18. மேலசித்திரை வீதி.. மதுரை.

# மதுரை

# தமிழ்ப் புலவர்கள்

( முதற் புத்தகம் )

ஆசிரியர்கள் ;

**வித்வான் சி. இராமசாமி, தமிழாசிரியர்,**
மதுரை மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி,
**வத்தலக்குண்டு.**

**வித்வான் வி. சிவக்கொழுந்து, தமிழாசிரியர்,**
V. M. போர்டு உயர்நிலைப் பள்ளி,
**பெரியகுளம்.**

அ. மா. ப.

வெளியிடுவோர் :

**ராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்,**
18, மேலச்சித்திரை வீதி,
**மதுரை.**

பதிப்புரிமை] [0—14—0

முதற் பதிப்பு, மே. 1955.

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT BOOK COMMITTEE.
( Fort St. George Gazette, dated 4—5—55. Page No. 29 )

அசோகா பிரிண்டர்ஸ், மதுரை : 55.

# முன்னுரை

"மதுரைத் தமிழ்ப் புலவர்கள்" என்னும் தலைப்பில் எம்மால் எழுதப்பட்டுள்ள இம் முதற் புத்தகத்துள் இரு பெருந் தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. இப் புலவர்கள் இருவரும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிற் சிறந்து திகழ்ந்தவர்கள். இவர்களுள் **மாம்பழக்கவிச்சிங்க நாவலர்** அவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங் கவிஞராய் விளங்கியவர். **அரசஞ் சண்முகனாரோ** நுண்மாண் நுழைபுல மிக்க ஆராய்ச்சியாளராகவும், சிறந்த உரையாசிரியராகவும் இலக்கணப் பெரும் புலவராகவும் இலங்கியவர். இப் புலவர்களின் வரலாறுகள் அவர்களின் காலவரையறைப்படி முறைப் படுத்தப் பட்டுள்ளன.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்களின் வரலாறு இது காறும் மாணவர்க்கு ஏற்ற எளிய நடையில் வெளிவந்ததில்லை. இந் நூலில் இயன்றவரை அக்குறையைத்தவிர்க்க முயன்றிருக்கிறோம். அரசஞ் சண்முகனாரின் வரலாறு ஏற்கனவே வெளி வந்துள்ளதாயினும் அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த வேறு சில நிகழ்ச்சிகளையும் அந்நூலில் சேர்த்துக் கோவைப்பட எழுதியுள்ளோம். நடையும் கருத்தும் கற்பார்க்கு நலம் பயக்குமென்றே நம்புகின்றோம். இந் நூலை எழுதுவதற்குத் தமிழறிஞர் சிலர் வெளியிட்ட நூல்களும், கட்டுரைகளும், செவிவழிச் செய்திகளும் துணையாக இருந்தன. துணைக்குக் காரணமாயிருந்த அவ்வறிஞர்க்கு எம் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக!

இந் நூலை ஆர்வத்துடன் அச்சியற்றி வெளியிட முன்வந்த மதுரை "**ராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்**" உரிமையாளருக்கு என்றும் மறவா நன்றியுடையோம். அத்துடன் இந்நூலைக் கண்ணுறும் கல்வித்துறை அலுவலர்களும் பள்ளிநிலையத்தலைவர்களும் ஆசிரியர்களும் இது மாணவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படும் வகையில் உதவிபுரிந்து மேலும் எம்மை ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்.

சி. இராமசாமி

வி. சிவக்கொழுந்து

# பதிப்புரை

நம் தமிழ்த்தாய் ஈன்றெடுத்த புலவர்கள் எண்ணிலரா வர். அவருள் பெரும்பான்மையோர் வரலாறுகளை நாம் இன்னும் அறியக்கூடவில்லை. காரணம் அவர்களின் வரலாறுகளை அவ்வப்போது குறித்து வைக்காத குறைதான். இக்குறை இந்நாளில் ஒருவாறு தவிர்க்கப்பட்டு வருகின்றது. இப்பணியில் எமக்கும் ஓர் பங்கு உண்டு.

தற்போது "மதுரைத் தமிழ்ப் புலவர்கள்" என்னும் தலைப்பில் இம்மதுரை மாவட்டத்தில் புலமையாற் புகழ் நிறுவி வாழ்ந்த புலவர்களின் வரலாறுகளை நூலாக அச்சிட்டு வெளியிட எண்ணியுள்ளோம். அவ் வரலாறுகளை வரைந்துதவ வித்வான்கள் **சி. இராமசாமி** அவர்களும் **வி. சிவக்கொழுந்து** அவர்களும் இணங்கியுள்ளார்கள். இம்முறையில் முதல் நூலாக வெளிவரும் இதில் திரு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர், அரசஞ் சண்முகனார் ஆகிய இரு பெரும் புலவர்களின் வரலாறுகள் அடங்கியுள்ளன.

எமது வேண்டுகோட்கு இணங்கி இவ்வரலாற்று நூலை எழுதியுதவிய வித்வான்கள், சி. இராமசாமி அவர்களுக்கும், வி. சிவக்கொழுந்து அவர்களுக்கும், ஒப்புநோக்கல் முதலியன செய்து திருத்தமுறவெளியிடுதற்கு உதவிய மதுரை, தொழிலாளர் நல உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் **வித்வான் கூத்தப்பன்** அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக.

இந்நூலைத் தமிழ் மக்கள் ஏற்றுப் போற்றி எம்மை மேலும் இப்பணியில் ஊக்குவார்கள் என நம்புகின்றோம்.

இங்ஙனம்,

**ராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்.**

# உள்ளுறை


| மாம்பழக் கவிச்சிங்க நாவலர் | | பக்கம் |
|---|---|---|
| பிறப்பு | ... | 1 |
| கல்வி கற்றல் | ... | 8 |
| கவிதை ஆற்றல் | ... | 10 |
| இராமநாதபுரம் செல்லல் | ... | 13 |
| கவிச்சிங்கம் என்ற பட்டம் | ... | 22 |
| சுவையான சில நிகழ்ச்சிகள் | ... | 25 |
| நாவலரின் சிலேடைப் பேச்சு | ... | 32 |
| பிறர்க்குதவிய பெருங்குணம் | ... | 37 |
| சேது மன்னரிடம் விடைபெறல் | .... | 43 |
| இறைவன் திருவடி எய்துதல் | ... | 45 |
| இயற்றிய நூல்கள் | ... | 47 |
| **அரசன் சண்முகனார்** | | |
| தோற்றம் | ... | 49 |
| கல்விப் பயிற்சி | ... | 53 |
| தமிழாசிரியர் பணி | ... | 61 |
| தமிழ்ச்சங்கப் புலவர் | ... | 67 |
| நூலாசிரியர் | ... | 74 |
| ஏழைக்கிரங்கல் | ... | 77 |
| இலங்கைப் பயணம் | ... | 84 |
| இறுதிக் காலம் | ... | 88 |

# மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

பிறப்பு :

கண்ணிருந்தும் காணுதவர் பலர். காதிருந்தும் கேளாதவர் பலர். வாயிருந்தும் பேசாதவர் பலர். இவ்வாறு ஆண்டவனுல் அளிக்கப்பெற்ற ஐம்புலன்களே அடைந்திருந்தும் அவற்ருல் பயனின்றி வாழும் மாந்தர் பலரை காண்கின்ரேம். இந்நாளிலும் காண்கின்ரேம். இத்தகையரைக் குறித்துத்தான் நம் கவியரசர் பாரதியார் "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்ரேம்" என்று கூறினுர் போலும்! ஆனுல் கண்பார்வையிழந்தும் கல்வி கேள்விகளில் வல்லுநராய், கலேச் சிறப்புடையவராய், கற்பனே நிறைந்த கவிச் சிங்கங்களாகத் திகழ்ந்தவர் சிலரும் நம் நாட்டிலே வாழ்ந்திருக்கின்றனர், பிற நாட்டிலும் தோன்றியுள்ளனர். அவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் இரட்டைப் புலவருள் ஒருவரும், கவி வன்மையால் யானேக் கன்றும் வளநாடும் பரிசாகப் பெற்ற அந்தக்கவி வீரராகவ முதலியாரும், செட்டி நாட்டின் சிறந்த புலவர் வன்ருெண்டச் செட்டியாரும், வங்க நாட்டின் தங்கக் கவிஞரான சுபோத சந்திரரும் ஆவர். இவர்கள் அனேவரும் "கண்ணுடையர் என்பவர் கற்ருேர்" "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற ஆன்ருேர் பொன் மொழிகட்கு இலக்காக வாழ்ந்தார்கள்.

இவர்களைப் போன்றே பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர் அவர்களும் இளம் பருவத்திலேயே இரு கண்பார்வையையும் இழந்தவர். முகக் கண்களை இழந்தாராயினும் அகக் கண்ணொளிபெற்று அரும்பெருங் கவிஞராய் விளங்கியவர். தமிழ் நாடெங்கும் "கவிச்சிங்கம்" எனத் தம் புகழ் நிறுவியவர். கவிமழை பொழிவதில் காளமேகம் போல் இலங்கிய பாவலர். விற்பனர் போற்றும் கற்பனைத் திறம் படைத்த மேலவர். பகைவரும் விரும்பிக் கேட்கு மாறு நயமுடன் உரையாடும் நாவலர். இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்தண்டமிழ்க் கவிஞரின் வரலாறு மாணவர்க்கும் மற்றவர்க்கும் வியப்பூட்டி அறிவுச் சுவை அளிப்ப தொன்றாகும்.

**ஊர் :** பாண்டிய நாட்டைச்சார்ந்த பழனி என்னும் பதியின் பெருமையைத் தமிழ் நாட்டவர் நன்கு அறிவர். இது பண்டுதொட்டு இன்றுவரை புகழுக்குரிய தலமாக விளங்குகின்றது. கடையெழு வள்ளல்களுள் ஒருவனை "வையாவிக்கோப்பெரும்பேகன்" என்னும் மன்னன் இவ்வூரில் வாழ்ந்ததாக வரலாறு உண்டு. கண்கண்ட தெய்வமெனவும், கலியுகவரதன் எனவும் பக்தர்களால் பரவப்படும் தண்டபாணியாகிய தமிழ்க்கடவுள் குன்றின் மீது நின்ற திருக்கோலத்தோடு அன்பர்களுக்கு அருள் புரியும் தலமிது. அக்குமரவேள் கோயில் கொண்டுள்ள ஆறுபடை வீடுகளுள் இதுவும் ஒன்றெனப் பக்திப்பனுவல்கள் பகர்கின்றன. இவ்வாறு பழமை, பெருமைகளால் பாடல் பெற்றுத் திகழும் இப்பதிக்கு ஆவினன்குடி, பொதினி, வைகாவூர், சிவகிரி, சித்தன்வாழ்வு

என்னும் வேறு பல திருப் பெயர்களும் வழங்குகின்றன. இவ்வூரின் சிறப்பைப் பற்றிப் புலவர் ஒருவர்

**''அன்னம் அளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்**
**சொன்னம் மழைபோல் சொரியுமூர்—உன்னினர்க்குத்**
**தீதுபிணி தீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்**
**ஓது திருப்பழனி யூர்''.**

பெற்றோர் : இத்தகைய சிறந்த பதியில் நூற்றிருபது ஆண்டுகட்கு முன்பு முத்தைய பத்தர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் விசுவப்பிரம்ம குலத்தினர். அக்குலப் பிரிவினுள் ஒன்றான சிற்பியின் மரபைச் சேர்ந்தவர். கல்வி, கேள்வி, கலைகளிற் சிறந்தவர். உத்தம குணங்களெல்லாம் ஒருங்கே நிறைந்தவர். கந்தனின் திருவடிகளை எந்நாளும் மறவாமல் வந்தித்து வணங்கும் சிந்தையாளர். 'செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' சீர்மையாளர். இவர் தம் இல்லறம் நல்லறமாகத் தழைக்க 'அம்மணி' என்னும் அருங் கற்புடைய அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாய் மணந்தார். கணவனும் மனைவியும் கருத்தொருமித்தவராகி வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். இருவரும் நிகழ்த்திய இல்லறத்தின் பயனாய் மன்மதயாண்டிற்குச் சரியான 1836-ம் ஆண்டு ஓர் நன்னாளில் இவர் தம் இரண்டாம் புதல்வராக நம் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிறந்தார். பிறந்த மைந்தனைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர் பெற்றோர். மாம்பழத்தின் முதற் பெயர் பழனியப்பன் என்பர். பின்னரே அவருக்கு ''மாம்பழம்'' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டி மாண்புடன் வளர்ப்பாராயினர் பெற்றோர்.

**"மாம்பழம்" பெயர்க் காரணம் :**

"மாம்பழம்" என்ற பெயர் முத்தைய பத்தரின் முன்னோர் காலத்திலிருந்தே அவர் தம் குடிப் பெயராக வழங்கிவருவது. அப்பெயர் தோன்றியதற்குச் செவிவழிச் செய்தியாக இரு வரலாறுகள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று "இக்கவிஞரின் முன்னோருள் ஒருவர் சிற்பக் கலையில் சிறந்திருந்ததோடு செந்தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சியிலும், மாம்பழச் சாற்றின் இனிய சுவைபோல் இனிய சொற்பொழிவாற்றும் திறமையிலும் சிறந்து விளங்கினார். அந்நாளில் அவருடைய சொற்பொழிவைக் கேட்டுச்சுவைத்த நாயக்கமன்னருள் ஒருவர் அவருக்கு 'மாம்பழம்' என்ற பட்டத்தை மகிழ்ந்தளித்துச் சிறப்புப் பல செய்தார். அன்றிருந்து குடிப்பெயராகவே வழங்கி வருகிறது." என்பதாம். மற்றொன்று "மதுரை திருமலை நாயக்க மன்னர் காலத்தில் நம் நாவலரின் முன்னோருள் ஒருவர் சிற்பக்கலையின் சிகரமாய் விளங்கினார். அவரை இயற்றுதற் கருத்தாவாகக் கொண்டு திருமலை நாயக்கர் தற்பொழுது புதுமண்டபம் எனவழங்கும் வசந்த மண்டபத்தைக் கட்டுவிக்கத் தொடங்கினார். ஒரு நாள் சிற்பியுடன் வந்த அவருடைய சிறு புதல்வன் தந்தையை நோக்கி மாம்பழம் வேண்டுமென அழுது பிடிவாதம் செய்தான், மாம்பழப்பருவம் அல்லாத காலம் அது. சிற்பி என் செய்வார்! சிறுவனுக்கு என்ன சமாதானங் கூறியும் அவன் அழுகையை நிறுத்தவில்லை. இந்நிகழ்ச்சியை அண்மையிலிருந்து அறிந்த அரசர் தம் அரண்மனைக்கு ஒரு ஆளை அனுப்பினார். சென்றவன் மன்னர் கட்டளைப்படி

தங்க மாம்பழத்துடன் திரும்பினுன். மன்னர் அதை வாங்கிச் சிறுவன் கையிற் கொடுத்து அழுகையை நிறுத்தினர். அன்றுமுதல் அச் சிற்பியின் குடிக்கு "மாம்பழம்" என்ற பெயர் வழங்கிற்று" என்பதாம். இவ்வாறு ஏற்பட்ட குடிப்பெயரே நம் கவிராயருக்கும் அவருடைய பெற்ருேரால் இடப்பட்டது. மூத்த மைந்தனைவிட இளையவனுன மாம்பழம் அழகிலும் சுறுசுறுப்பிலும் மிகுந்து விளங்குவதைக் கண்ட பெற்ருேர் குழந்தையைத் தங்கள் உயிரினும் மேலாகப் போற்றி வளர்த்தனர். மாம்பழத்திற்கு மூன்ருண்டுகள் நிறைந்தன.

**அம்மை நோய்:**

அவ்வமயம் பழனிப் பகுதியில் பருவமழை தவறிக் கோடை மிகுதியாகிக்கொடிய வெப்பத்தை விளைவித்தது. அதனுல் அப்பக்கங்களில் அம்மை நோய் பற்றியது. எள்ளிட இடமின்றி உடல் முழுதும் கொப்புளம் தோன்றிக் கொடுமை தந்தது. பிள்ளையின் நலிவு கண்டு பெற்ருேர் பெருந்துன்பம் உற்றனர். நோய் குறைய வழியின்றி மிகுந்துகொண்டே வந்தது. இறுதியில் "தீராத நோய்க்குத் தெய்வமே துணை" யென நம்பினர். தாய் தந்தையர். முருகப்பெருமான் திருவடிகளையே மனக் கவலை தீர்க்கும் மருந்தாகக் கருதினர். அம்மை நோயால் புண்பட்டிருந்த புதல்வனைப் பக்குவமாய் எடுத்துக் கொண்டு பழனி மலைமீது ஏறினர். மலையேறி வலம்வந்து தண்டபாணியைத் தரிசித்து வணங்கினர். குழந்தையைக் குமரக் கடவுளின் திருமுன்னர்க் கிடத்திக் குறை தீர்க்குமாறு மனமுருகி வேண்டினர். அந் நிலையில்

குமரவேள் அருள்சுரந்து கூறுவதுபோல் "முத்தையா! நீ கவலையை விடு! உன் மைந்தன் பிணிநீங்கி நலம்பெறுவான்; அவனை இல்லத்திற்கு எடுத்துச் செல்க!" என அசரீரி வாக்கொன்று தம் செவியில் ஒலித்ததாக உணர்ந்தார். பத்தர் உடனே முருகப் பெருமானின் திருவுள்ளக் கருணையை வியந்து மீண்டும் வணங்கி மலைவிட்டிறங்கி மகவுடன் வீடு சென்றனர் அப் பெற்றோர்.

**கண் கெட்டது :**

மறுநாள் பொழுது புலர்ந்ததும் புதல்வனைப் பெற்றோரும் மற்றோரும் ஊன்றிநோக்கினர். குழந்தையின் உடலிலிருந்த கொப்புளம் முழுவதும் குறைந்திருப்பது கண்டு மகிழ்ந்தனர். அன்று புதிதாக வாய்திறந்து குழந்தை கூறிய மழலை மொழியில் "முருகா! முருகா!" என்ற ஒலியும் முழங்கியதைக் கேட்டு வியப்புற்றனர். ஆயினும் அம்மைநோய் நீங்கிய மறுநாளே மாம்பழத்திற்கு அணிகலனாய் விளங்கிய அருங்கண்களின் ஒளி குன்றிப் பார்வை கெட்டிருந்தது. அந்தோ! "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றானது" அதைக்கண்டு பெற்றோரும் உற்றாரும் பெரிதும் புலம்பிக் கண்ணீர் சொரிந்தனர். முன் போலவே முருகப் பெருமானிடம் முறையிட்டுக் கொள்ளக் குழந்தையுடன் மலைமீது சென்றனர். ஆண்டவன் முன்னிலையில் குழந்தையைக் கிடத்தி மீண்டும் கண்பார்வை அளிக்கும்படி பலவாறு வேண்டினர். குருக்களிடம் திருநீறும் தீர்த்தமும் பெற்றுக் குழந்தைக்கு இட்டு "கண் ஒளி கெடுத்த கடவுள் இதற்கு நன்மதி

கொடுப்பான்'' என எண்ணி மனதைத் தேற்றிக்கொண்டு மலையைவிட்டிறங்கி மனையை அடைந்தனர். அன்றிரவு முத்தைய பத்தரின் கனவில் முருகப் பெருமான் தோன்றி "அன்பனே! ஊனக்கண் இழந்த உன் குழந்தையைக் குறித்து நீ உளம் வருந்தாதே! அவன் ஞானக்கண் பெற்று ஞாலம் புகழ வாழ்வான்'' என்று கூறியதாக அறிந்து மைந்தனின் எதிர்கால மாண்பை நோக்கி அமைதியுடன் இருந்தனர்.

# கல்வி கற்றல்.

**எழுத்தறிவிப்பு :**

இங்ஙனம் முகக்கண் இழந்து அகக்கண் பெருக்கத்தோடு வளர்ந்த மாம்பழத்திற்கு ஐந்து வயது நிறைந்தது. பள்ளிசென்று படித்து வருவதற்கியலாமல் பார்வையற்றிருந்த காரணத்தால் தந்தை முத்தைய பத்தர் குழந்தைக்குத் தாமே கல்வி கற்பிக்கத் தலைப்பட்டார். நல்லதொரு நாளில் எழுத்தறிவிக்கத் தலைப்பட்டார். ஒவ்வொரு எழுத்தையும் முறைப்படி உச்சரிக்கச் செய்தார். மைந்தனை மடியிற் படுக்கவைத்து எழுத்துக்களின் வரிவடிவை முதுகுப்புறத்தில் எழுதிக்காட்டினார், சில நாட்களில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து ஆகியவற்றை மாம்பழம் கற்றுக்கொண்டார். கற்ற எழுத்துக்களைக் குற்றமின்றிக் கற்பலகையில் எழுதியும் காட்டினார். பின்னர் சொற்களையும் சொற்றொடர்களையும் கற்று அவற்றையும் முத்துப்போன்ற எழுத்துக்களால் வரி பிறழாமல் எழுதிக்காட்டும் திறமையை அடைந்தார். இவ்வாறு எளிதில் எழுத்துக்களை, சொற்றொடர்களைக்கற்ற, தம் மைந்தனின் அறிவாற்றலைக் கண்ட முத்தைய பத்தர் மெத்த மகிழ்ச்சி கொண்டார். முருகன் கனவில் தோன்றி மொழிந்த நிகழ்ச்சியும் அவருடைய நினைவிற்கு வந்து உவகையூட்டியது. இங்ஙனம் அறிவோடு வளரும் மைந்தனுக்குத் தந்தை செய்யவேண்டிய கடமைகளை எண்ணினார் பத்தர். "அறிஞர் கூடியுள்ள அவையில் தம் மகன் கல்வி கேள்வி

களாலும், பேச்சாலும், கவி பாடுவதாலும் சிறந்து விளங்கவேண்டும், அதற்கேற்றவாறு அவனை அறிஞனுக்க வேண்டும்'' என உணர்ந்து தக்க ஆசிரியர் ஒருவரைத் தேடிக் கொணர்ந்தார். அவ் வாசிரியர் பெயர் 'மாரிமுத்துக் கவிராயர்' என்பது, அவரிடம் தம் மைந்தனை ஒப்படைத்துக் கல்வி புகட்டும்படி செய்தார், ஆசிரியரும் மாம்பழத்தின் தகுதியறிந்து தமிழை முறையாகக் கற்பிக்கத் தொடங்கினர், மாம்பழம் ஆசிரியர் கற்பிக்கும் அருந் தமிழைக் கருத்தூன்றிக் கற்றுவரலானர். ஒன்பது ஆண்டுகளுக்குள் அந்தாதி, மாலை, உலா, தூது, பிள்ளைத்தமிழ், கோவை முதலிய சிற்றிலக்கியங்களையும் பெருங் காவியங்களையும் இலக்கண நூல்களையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தார். யாப்பிலக்கண விதிகளை உணர்ந்து கவிபாடும் திறமையும் வாய்க்கப் பெற்றார். பின்னர் வேதாந்த சித்தாந்த சாத்திரங்களையும், தருக்கம் சோதிடம், சங்கீதம் முதலிய கலைகளையும் அவ்வவற்றில் தேர்ந்த ஆசிரியர்களிடம் கற்றுக்கொண்டார், சுருங்கக் கூறின் நம் மாம்பழம் ஆசிரியர்பால் கற்கவேண்டிய அனைத்தையும் வழுவின்றிக் கற்றுக் கவி பாடுவதிலும் சொற்பொழிவாற்றுவதிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். இதனுல் மாம்பழத்திற்குக் கல்வி புகட்ட வந்த ஆசிரியரும் பலராயினர். இவர் தமிழ் மொழியே யன்றி வட மொழியிலும் பயிற்சி பெற்று வல்லவரானர். இவருக்கு வடமொழிப் பயிற்சி அளித்தவர்கள் பழனி வழக்கறிஞர் திரு. சுப்பராய பாரதியாரும், குருக்கள் திரு. இராமசாமி ஐயருமாவர்,

## கவிதை ஆற்றல்.

**முருகன் மீது :**

இங்ஙனம் இருமொழிகளிலும் இணையற்று விளங்கிய மாம்பழம் தாம் வழிபடு கடவுளாகிய முருகன்மீது முதன் முதலாகக் கவிபாடத் தொடங்கினார். குமரகுரு பதிகம், சிவகிரிப் பதிகம், பழனிப் பதிகம் என்னும் பாமாலைகளைப் பாடி ஆறுமுகப் பெருமானுக்கு அழகுறச் சூட்டினார். அப்பாக்கள் ஆற்றொழுக்கும் எளிய நடையும் சொல்லழகும் பொருள் ஆழமும் அமைந்து இன் சுவையும், சந்தமும் மிகுந்து கற்போர், கேட்போரின் உள்ளத்தைப் பத்தி வெள்ளத்தில் ஆழ்த்தும் பான்மை யுடன் விளங்கின. மாம்பழக் கவிஞர் கன்னித் தமிழாற் கந்தனை வழுத்திப் பாடிய பின் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடுவதற்கு முயன்று வெற்றிகொண்டு அவற்றிலும் வல்லாரெனப் பெயர் பெற்றார். மேலும் இவர் யாவரும் வியக்குமாறு விரைந்து கவிபாடும் திறமை அடைந்ததுடன் மற்றவர் பாடிய கவிகளை ஒருமுறைக் கூறக் கேட்டவுடன் காந்தம் இரும்பைக் கவர்வதுபோல் அவற்றை அப்படியே மனதில் ஈர்த்துக்கொள்ளும் ஆற்றலையும் எய்தினார். இவ் வாற்றலைத்தான் "ஏகச்சந்தக் கிராஹியம்" என்பர். பிறர் வாய்ப் பேச்சின் ஒலியையும், எதிரே வருவோரின் காலடி ஓசையையும் விரைவில் அறிந்து அவர்கள் இன்னின்னார் என்று தெளிவாகக் கூறும் நுண்ணுணர்வும் வாய்க்கப் பெற்றார் இவர். இத்தகைய அருஞ்செயல்கள் அறிவுத் தெய்வத்தின் அருளாலேயே ஒருவருக்கு அமைவதாகும்.

அங்ஙனம் அமையப் பெற்றவரே நமது மாம்பழக்கவிராய ராவார். அறிவுத் தெய்வமாகிய நாமகளை நாடிக் கவிதை யாற்றல் வழங்கவேண்டுமெனப் பாடிய அவர் தம் பாடல்கள் பல இதற்குச் சான்றாய் அமைகின்றன. இவ்வாறு மாம்பழக் கவிஞர் பல்வகைக் கவிகளையும் பாங்குறப் புனைந்து மக்களிடையே பரப்பி வரலாயினர். இதனால் கவிஞரின் புகழ் மென்மேலும் பெருகுவதாயிற்று.

## புகழ் பெறல் :

கவிஞருடைய புகழ் முதன் முதலில் பழனிப் பதியில் தான் விளங்கியது. அவர் புகழைக் கேட்டவர்களுள் பாப்பம்பட்டியைச் சார்ந்த வேங்கிடசாமி நாயக்கர் என்பாரும் ஒருவர். அவர் அந்நாளில் பழனியாண்டவன் ஆலயத்திற்கு அறநிலையப் பாதுகாவலராயிருந்தவர். கடவுட் பற்றும் கன்னித் தமிழ்ப் பற்றும் உடையவர். அவருடைய பெருமையும் புகழும் அந்நாளிற் பலவிடங் களிலும் பரவியிருந்தன. மாம்பழத்தின் பா நலமறிந்த அவர், கவிஞரின் புலமையைத் தமிழுலகத்துக்குக் காட்ட வேண்டுவன செய்தார். அதனால் மாம்பழக்கவியின் புகழ் பழனிப் பகுதியிலும் பிறவிடங்களிலும் பரவத் தொடங்கியது. நாயக்கர் தமக்காக முயன்றதைப் பாராட்டிக் கவிராயர் அவர்மீது பல புகழ்க் கவிகளைப் பாடினார். அக்கவிச் சிறப்பறிந்த நாயக்கர் பாவலருக்குப் பலவகைப் பரிசுகளும் தந்து ஊக்கமூட்டினார். மேலும் கவிஞருக்குத் தமது நெல் விளையும் நிலத்தில் ஒரு பகுதியையும் வெகுமதியாகக் கொடுத்தார். இவ்வாறு

நாயக்கர் அளித்த பரிசுகளால் மாம்பழம் தம் கவிச் சிறப்பைத் தாமே உணரலானர். அதன்பிறகு பழனிப் பகுதியிலும் அதனை அடுத்துள்ள சிற்றூர், பேரூர்களிலும் செல்வராய் விளங்கியவர்களிடத்துச் சென்று அவர்கள் மீது கவிதைகள் பாடியும் சிறு பிரபந்தங்கள் இயற்றியும் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டு பொருள் பெற்றுத் தம் புகழையும் பெருக்கிக்கொண்டார்.

卐

# இராமநாதபுரம் செல்லல்.

**பரிசில் வாழ்க்கை :**

19-ம் நூற்றாண்டில் மாம்பழக் கவிஞருக்கு ஒப்பான புலவர் இந்நாட்டில் இல்லை என்னும்படி திகழ்ந்தார். ஆங்கிலப் புலவர்களான மில்டன், போப், மெகாலே போன்றவர்கள் தமது பன்னிரண்டாம் வயதிலேயே கற்பன கற்றுக் கவிபாடும் திறமை பெற்றிருந்தனர் என்று அவர் தம் வரலாறுகள் கூறுகின்றன. நம் நாட்டிலும் பிற்காலத்தே பாரதியார் என்னும் கவிஞர் தமது பதினொன்றாவது வயதிலேயே கவிபாடத் தொடங்கினா ரென அறிகின்றோம். இவர்களைப் போன்றே நமது மாம்பழக் கவிஞரும். தமது பன்னிரண்டாவது வயதிலே தமிழ் நூல்களை ஐயம் திரிபறக் கற்று இணையற்ற கவிஞ ராயும் இலங்கினார். பாக்கள், பாவினங்களையும், யமகம் திரிபு, அடிமடக்கு, ஏகபாதம், நீரோட்டகம், நாகபந்தம் போன்ற சித்திரக் கவிகளையும் தங்குதடையின்றிப் பாடும் வல்லமை பெற்றோர், புராண காவியம், பிரபந்தம் போன்ற நூல்களை எளிதில் இயற்றும் திறனையும் இவர் எய்தினார். ஒரு பொருளைக் குறித்துக் கேட்ட மாத்திரத்திலோ ஈற்றடி கொடுத்துப் பாடச் சொன்ன மாத்திரத்திலோ, காலம் தாழ்க்காமல் காளமேகம்போல் கவிமழை பொழி யும் வன்மையுடையவராகக் காணப்பட்டார். கவிஞராய இவர் தம் புலமை நிறைவை அறிந்த அறிஞர் பலரும் இவரைத் "தமிழச் சக்கரவர்த்தி" எனவும், "கலைஞான பீடம்" எனவும், "நாமடந்தையின் நல்லிருக்கை" எனவும் பலவாறு புகழ்ந்து கொண்டாடலாயினர்,

இவ்வாறு மாம்பழக் கவிஞர் பேரும் பெருமையும் பெற்று விளங்குகையில் இவர் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அதாவது பண்டைக்காலப் பாவலர்களைப் போலவும், தமது மூதாதையர்களைப் போலவும், தமிழ்ப் பற்றும் கொடைத்தன்மையுமுள்ள நாட்டிலுள்ள குறுநில மன்னரையும் சிறந்த செல்வர்களையும்கண்டு பாடித் தமது புலமையை விளக்கிப் பரிசுகள் பல பெற்று வாழவேண்டு மென்பது. இங்ஙனம் எழுந்த எண்ணம் இவரை மேன் மேலும் தூண்டிக்கொண்டே இருந்தது. அப்பொழுது மாம்பழக் கவிஞரின் வயது பதினேழு. தமது எண்ணத்தை உற்றார், உறவினர், பெற்றோர், பிற அறிஞர் களிடத்துக் கூறி அவர்களின் கருத்தறிய விழைந்தார். அவர்களும் கவிஞரின் எண்ணத்தைப் போற்றி நல்வரவு கூறி ஊக்கினர். ஊக்கப்பட்ட கவிஞரின் உள்ளம் உறுதியடைந்தது. பல வெளியூர்களுக்கு அடிக்கடி பயணம் செய்துவரும் பழக்கமுள்ள தக்கவர் சிலரை அடுத்து அவர்களிடம் "தமிழ்ச்சுவை தேர்ந்து பரிசு வழங்கும் தமிழ்நாட்டுச் சிற்றரசுகளுள் தலை சிறந்து விளங்குவது எது?" என உசாவினர்.

**சேது மன்னர் சிறப்பு ;**

இதைக்கேட்ட சிலர் "இராமநாதபுரத்தைச் சேர்ந்த சேது நாட்டு மன்னர்கள் தாம் பண்டைச் சேர, சோழ, பாண்டியர்கட்குப் பின்னர் கொடைத் தன்மையிலும், தமிழ்ப் புலமையிலும், தமிழ்ப் புலவர்களைப் போற்றுவ திலும் சிறந்தவராக விளங்குகின்றனர்" எனக் கூறினர். "ஒருதுறைக்கோவை", பாடிய 'பொன்னுங்கால்' அமிர்த

கவிராயருக்குப் பண்டைச் சேது மன்னர்களுள் ஒருவர் பதினாயிரம் பொன் பரிசளித்தாரெனவும் எடுத்துக் காட்டினார். அப்பொழுது சேது நாட்டு அரசராகத் திகழ்ந்தவர் முத்துராமலிங்க சேதுபதி என்பவர். அவர் இன்றமிழைப் பழுதறக் கற்ற அறிஞராகவும் ஈகையிற் சிறந்தவராகவும் காணப்பட்டார். பல சுவையுள்ள சிறு சிறு கவிதைகளையும் நூல்களையும் இயற்றியவர் அவர். அவருடைய தமையனார் தாம் பொன்னுச்சாமித் தேவர் என்னும் புகழ்க்குரிய தலைவர். மதுரையில் நான்காம் சங்கம் நாட்டிய பாண்டித்துரைத் தேவரின் அருமைத் தந்தையாரும் அவரே. பொன்னுச்சாமித் தேவரவர்கள் அருங்குண வள்ளலாகவும் பெருங் கொடைக் செல்வ ராகவும் பலகலை வல்லுநராகவும் திகழ்ந்தார். ஆதலின் பழுமரம் நாடிச்செல்லும் பறவைகள்போல் தமிழ்நாட்டுப் பாவலர் பலர் சேது மன்னரைக் கண்டு பாடிச் சிறப்புப் பல பெற்று வந்தனர்.

**பயணத்திற்கு ஏற்பாடு :**

இவைகளை யெல்லாம் கேட்டறிந்தார் மாம்பழக் கவிஞர். முதன்முதலில் இத்தகைய சிறப்புவாய்ந்த சேது மன்னர்களைக் கண்டு பாடிப் பரிசு பெறுவதே தக்கது என்னும் முடிவுக்கு வந்தார். பயணத்திற்குச் செய்ய வேண்டிய ஆயத்தங்களை யெல்லாம் சிந்தித்தார். அவர் மேற்கொண்ட பயணத்திற்குப் பெரும்பொருள் வேண்டி யிருந்தது. தம்முடன் சமையற்காரர்கள், கையேட்டுக்

காரர்கள், சுற்றத்தினர், ஊழியம் செய்பவர், வண்டி ஓட்டுபவர் முதலியோர் வரவேண்டியது முக்கியம் எனக் கருதினார். நெடுந்தொலைவில் உள்ள இராமநாதபுரத்திற்கு வாகன வசதிகள் குறைந்த அக்காலத்தில் அவர் பயணம் செய்யவேண்டியவரானார். ஆங்குச் சென்றால் அரச பேட்டி கிடைக்கும் வரை காத்திருக்கவேண்டும். அது வரையும் கைச்செலவிற்குப் பணம் வேண்டும். இவற்றிற் கெல்லாம் முன்கூட்டியே ஆயத்தம் செய்ய முயன்றார். இராமநாதபுரத்திற்குப் புறப்படுமுன் செலவிற்குப் போதுமான பணத்தைத் திரட்டினார். உடனே ஆய்குடி யென்னும் ஊரையடைந்து ஆங்குள்ள குறுநில மன்னர் மீது சீட்டுக்கவியொன்று பாடினார். கவிதைச் சிறப்பைக் கண்ட ஆய்குடி மன்னர் மாம்பழக் கவிஞருக்குத் தக்க பரிசுகள் வழங்கி அனுப்பினார். இவ்வாறே தென்கடலூர், தேவகோட்டை, உடுமலைப்பேட்டை முதலிய ஊர் களுக்குச்சென்று குறுநில மன்னர்களையும் செல்வரையுங் கண்டு பாடிப் பரிசுகள் பெற்றார். அவருக்குப் போதுமான பொருள்கள் சேர்ந்தன. உடனே நல்லநாள் ஒன்றைத் தேர்ந்து முன் குறிப்பிடப்பிட்ட பரிவாரங்களுடன் காளைகள் பூட்டிய பெட்டிவண்டியில் அமர்ந்து பழனியி லிருந்து திண்டுக்கல் வழியாக இராமநாதபுரத்திற்குப் புறப்பட்டார். இடையில் மதுரையில் இறங்கி சொக்க நாதரையும் அங்கயற்கண்ணியையும் வணங்கினார். சிறந்த புலவர் பலர் தோன்றிய ''வேம்பத்தூர்'' என்னும் பதியில் இரண்டொரு நாள் தங்கி அவ்வூர் மக்களால் மதிக்கப் பெற்றுப் பின்னர் இராமநாதபுரத்தை அடைந்தார்.

**மன்னரைக்காண வாய்ப்பு :**

இராமநாதபுரத்தை யடைந்த கவிஞர் தம் தகுதிக்கேற்ற விடுதியொன்றைக் குடிக்கூலிக்கு அமர்த்திக் கொண்டு சேதுபதி மன்னரைக் காணும் பொருட்டுக் காத்திருந்தனர். அங்ஙனம் காத்திருந்தும் மன்னரைக் காணும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவேயில்லை. சேது மன்னரின் அவைப்புலவர்கட்கு மாம்பழக்கவிராயர் வந்து தங்கியுள்ளமை நன்கு தெரியும். ஆயினும் அவர்களுள் எவரும் அச்செய்தியை மன்னருக்குத் தெரிவிக்கவில்லை. மன்னரைப்பாராமல் எத்தனைநாளைக்குக் கைப்பொருளைச் செலவு செய்துகொண்டு இங்குத் தங்கியிருப்பது, என்ற வருத்தம் கவிஞருக்கு ஏற்பட்டது. ஆயினும் அவர் "அடுத்துமுயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்ற உண்மையை உணர்ந்தவராதலால் பொறுமையோடு கலங்காது அரசரைக் காணும் நற்காலங்கருதிக் காத்திருந்தான்.

இந்நிலையில் ஒரு நாள் பொன்னுச்சாமித் தேவரவர்கள் தமது அவைக்களப் புலவர்களான தமிழ், வடமொழி வாணர்களை அழைத்துத் திருமகள் துதியான வடமொழிச் சுலோகம் ஒன்றைக்கூறி அதன் பொருளைத் தமிழில் வெண்பாவாகப் பாடிக்கொடுக்குமாறு கேட்டார். வெண்பாக்களமைக்க இடர்ப்பட்ட அவ்வாணர்களுள் ஒருவர் மாம்பழக் கவிராயரை அண்டி அவ்வடமொழிச் சுலோகத்தில் பொருளை அமைத்துத் தமிழில் ஒரு வெண்பா இயற்றித் தரும்படி வேண்டினர். அவர் விரும்பியவாறே கவிஞரும் பாடித்தந்தார். அதைப்

பெற்றுச் சென்ற வாணர் பரிசு பெறும்பொழுது அப் பாடலின் வரலாற்றைப் பொன்னுச்சாமித் தேவரிடத்தில் கூறினர். கவிஞரும் பாடிக் கொடுத்த வெண்பா:-

**''அம்புயமென் ருதுசகி யாதுனது தாள்சகிமா**
**ரம்புரிகர் பார்வைசகி யாதுமெய்யுன்—வம்புயங்கை**
**தாங்கலமெய் மால்வலுரஞ் சார்தலரி தென்னிலென்வாய்**
**வீங்குரையாற் றுங்கொறிரு வே''.**

**இதன் பொருள் :**

இலக்குமி தேவியே ! நினது பாதம் தாமரை மலரின் மெல்லிய மகரந்தப் பொடிபடினும் பொறுக்காது. நின் மெய் உனது தோழியர்களின் அம்புக்குச் சமமான பார்வையைப் பொறுக்காது. நினது கைகள் அத்தாமரை மலரைத் தாங்க ஆற்றுதனவாயிருக்கின்றன. நின் திருமேனி திருமாலின் வன்மை பொருந்திய திருமார்பைச் சாந்திருத்தல் அருமையாகும். அங்ஙனமாகுல் என் வாக்கில் நிறைந்துவரும் சொற்களை அவைகள் பொறுக்குமோ ? பொறுக்கலாற்ற. என்பதாம்''.

இவ்வெண்பாவின் சொற்சுவை, பொருட்சுவைகளைப் பொன்னுச்சாமித் தேவரவர்கள் கண்டு மகிழ்ச்சி மீக்கூர்ந்தார். பாவாணர்கள் பாடிவந்த வெண்பாக்களுள் இதுவே இனியதாக விளங்கியது. இத்தகைய வெண் பாவையமைத்த கவிஞரைக் காண்பதில் தேவருக்கு எல்லையற்ற விருப்பம் எழுந்தது. உறுப்புக் குறை யுள்ளவர்களை அரசர் பார்க்கலாகாது என்றிருந்த வழக்கத்தையும் அவர் பொருட்படுத்தவில்லை. தம் அவைக் களத்திலிருந்த தக்கார் சிலரை அனுப்பி மாம்பழக்

கவிராயரை அழைத்துவருமாறு ஆணையிட்டார், ஆணை பெற்றவர்கள் விரைந்துசென்று கவிராயரைக் கண்டனர். தேவரவர்களின் கட்டளையை அறிவித்து அவரை அரண்மனைக்கு வருமாறு வேண்டினர்.

**சேது மன்னரைக் காணல் :**

இதைக் கேட்ட கவிராயருக்கோ அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. உடனே கையேட்டு மாணவர்களுடன் அவர் அரசவையை அடைந்தார். பொன்னுச்சாமித் தேவரவர்கள் வந்த கவிராயரை முகமலர்ந்து வரவேற்று இனிது உபசரித்து இருக்கை தந்து அமரும்படி செய்தார். அங்ஙனம் அமர்ந்தபின் கவிஞருடன் வந்த "கற்றுச் சொல்லி" ஒருவன் அவருக்கு அரசவையில் பொன்னுச் சாமித் தேவரவர்களுடன் அவர் தம் இளவல் முத்துராமலிங்க சேதுபதி மன்னரும் கொலு வீற்றிருப் பதைக் குறிப்பால் உணர்த்தினன். அதை உணர்ந்த கவிராயர் முதலில் மரியாதைப்படி அரசரையும், பின்னர் பொன்னுச்சாமித் தேவரையும் வணங்கி அவர்கள் மீது

1 **மங்கரிய பங்கவிடர் வெங்கிடரின் முங்கலுறு வார்மீளற்குன்**
**பொங்கவக ளங்க சமுகங்கருணை வங்கமது போலு மாலோ!**
**கொங்கர் சக ரங்கர்க விங்கர் பல ருங்கரமுன் கூப்பக் கீர்த்தி**
**தங்க வளர் துங்கனுய சிங்கமெனு மெங்கள் பொன்னுசாமி**
**மாபோ**

2 **புகழான்ற நகமீன்ற பொன்னின் முலைக் கன்னியொரு**
**புறந்தழீஇப்பல்**
**லகிலாண்ட முதலாண்ட வருண்மோன சிவஞான**
**வமலன் காக்க**
**பகர் பூங்காத் தொறும்பூவை பதங்கோவைச் செழும்**
**பாவைப் படிக்குந் தேவை**
**நகரேந்திர சுமுக! முத்துராமலிங்க பூப! வுனை நானுந்**
**தானே.**

என்ற இரு வாழ்த்துக் கவிகளையும் கூறினர். இங்ஙனம் பாடி, தாம் வந்த கருத்தையும், காண்பதற்காகக் காத்திருந்ததையும் இனிய குரலாலும் உருக்கமான மொழிகளாலும் வாக்கு வல்லமையோடு அரசர்க்கு அன்பு ஊற்றெழுமாறு மொழிந்தார். கவிராயரின் அறிவாற்றலை யும், கவிச்சிறப்பையும் சொல் வண்மையையும் கண்டு அரசரும் பிறரும் வியந்து மகிழ்ந்தனர். சேதுபதியும் தேவரும் கவிராயருக்கு முகமன்கூறித் தக்க பரிசுகளும் வழங்கினர்.

**ஆற்றலை அறிவித்தல்:**

பொன்னுச்சாமித் தேவரவர்கள் புரவலராயிருந்த தோடு பெரும் புலவராயும் விளங்கியவர். கவிபாடும் ஆற்றலும் பெற்றவர். மாம்பழக் கவிராயரின் புலமையை மேலும் மேலும் சோதிக்க விரும்பிப் பலவகையான ஈற்றடிகளைக் கொடுத்துப் பாடல்களை உடனுக்குடன் பாடி முடிக்குமாறு கேட்டனர். கவிராயரும் தேவரின் விருப்பத்தை உணர்ந்து அவர் கொடுத்த ஈற்றடிகளுக்கு கேற்பத் தங்குதடையின்றி உடனுக்குடன் பாடல்களைப் பாடிக் காட்டினர். முத்துராமலிங்க சேதுபதியும் இவ்வாறு பல ஈற்றடிகள் கலந்து தந்து பாடுமாறு கேட்டனர். அதற்கும் கவிராயர் சளைக்கவில்லை, விரைந்து பாடிக்கொடுத்து வேந்தரின் உள்ளத்தையும்மகிழ்வித்தார். மன்னரிருவரும் கவிராயரின் புலமைகண்டு 'இவர் வாக்கில் *கலைமகள் நடம்புரிகின்றனளோ!" எனப் போற்றிப்* பாராட்டினர். மீண்டும் அவர்கள் கவிராயரின் ஆற்றலை

மற்றவர்க்கு வெளிப்படுத்த எண்ணிப் பல சொற்களையும் சொற்றொடர்களையும் கொடுத்துத் தம் கருத்திற்கிணங்கக் கவிபாட வேண்டினர். அவ்வாறே கவிராயரும் ஏற்ற கவிதைகளை உடனுக்குடன் பாடித் தமது ஆற்றலை வெளிப்படுத்தினர்.

பொன்னுச்சாமித் தேவரவர்களும் சேதுபதியரசரும் இவ்வாறு புலமையாலும் பொருக்கெனக் கவிபாடும் புதுமையாலும் சிறந்து விளங்கும் மாம்பழக் கவிராயரைக் கண்டு வியப்படைந்தனர். அவ்விருவரும் கவிராயரை மேலான முறையில் சிறப்பிப்பதற்கு யாது செய்வது? எனச் சிந்தித்துக்கொண்டும் இருந்தனர். சேதுமன்னர் அவையிற் கூடியிருந்த மற்றத் தமிழ்ப் புலவர்களும் வடமொழி வாணர்களும் சிற்பம், ஓவியம், சங்கீதம், சோதிடம் முதலிய கலைகளில் வல்லாரும் கவிராயரின் மேலான புலமையைப் பாராட்டிச் சேதுமன்னர்கள் அவருக்கு அளிக்கும் பரிசு யாதென அறிய ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். கவிராயரும் தமக்கு மன்னர் வழங்கும் பரிசு யாதாயிருக்குமென எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

## "கவிச்சிங்கம்" என்ற பட்டம்.

அந்நாளில் மாண்புமிக்க பொன்னுச்சாமித் தேவ ரவர்கள் அறிஞர் ஒருவரிடம் தம் அவையை நாடிவந்த தமிழ்ப் புலவர்களில் மாம்பழக் கவிராயரைப் போல் பெரும் புலவர் ஒருவரும் வந்ததே இல்லை எனவும் யாவரினும் இவரே மேலானவர் எனவும் இவரது புலமை யும் திறனும் தமது நெஞ்சை உருக்கி அன்பைப் பெருக்கி ஆர்வத்தை மிகும்படி செய்தன எனவும் பெரிதும் பாராட்டிக் கூறினாராம். தேவரவர்கள் இவ்வாறு கொண்ட மகிழ்ச்சியின் பெருக்கால் தமது இருக்கையி லிருந்து பொருக்கென எழுந்து கவிராயர் அமர்ந்திருந்த இடத்தை அடைந்தார். அடைந்து அவரது வலக்கையை தம் வலக்கரத்தாற் பற்றி நன்ருய்க் குலுக்கி "சபாஷ்" என்று கூறி அகத்தில் உள்ள அன்பை அறிவித்தார். மேலும் "புலவர் பெரும! நுமது தமிழ்ப் புலமை சாற்றற் கரியது. அழகும், சுவையும் ஒருங்கே அமையக் கவிபாடும் திறமையும் வியக்கத்தக்கதே. மற்றும் புலமைக்குரிய கலை நலன்களெல்லாம் நன்கு வாய்க்கப்பெற்று நாமகளின் பீடமென விளங்கும் தங்கட்கு இப் பேரவையில் "கவிச் சிங்கம்" என்ற விருதுப்பெயரை, யாம் மிக மகிழ்ச்சி யுடன் சூட்டுகின்ருேம். தங்கட்கு தமிழகத்தில் இத் திருப்பெயர் என்றும் நின்று நிலவுவதாக" என்று பாவலருக்கு அப்பெயர் அளித்துப் பாராட்டினர்.

இங்ஙனம் தேவரவர்கள் தமது கைதொட்டுக் குலுக்கியதையும் கவிச்சிங்கம் என விருதுப்பெயர்

வழங்கியதையும் குறித்துக் கவிராயர் சுவை மலிந்த பாடல்கள் சிலவற்றைப் பாடித் தேவரை மகிழ்வித்தார். தேவரவர்களும் கவிராயரின் தகுதிக்கேற்பப் பரிசளிக்க நினைத்தார். தமது நிதி அறையிலிருந்து பொன் முடிப்புக் களையும், விலையுயர்ந்த பொற்சரிகைப் பீதாம்பரங்களையும் வரவழைத்தார். வரவழைத்த பரிசுப் பொருள்களை அகமும் முகமும் மலர்ந்து புலவர்க்குத் தமது கையா லேயே வழங்கினார். கவிச் சிங்கம் அவர்களும் அவற்றை வணக்கத்தோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுத் தம் நன்றி யறிதலை இனிய கவி ஒன்றின் மூலமாக அறிவித்தார். இச்செய்திகளெல்லாம் சேது மன்னர்களைக் குறித்துக் கவிச்சிங்கமவர்கள் அவ்வப்போது பாடிய தனிநிலைக் கவிகளின் மூலம் நன்கு தெளிவாகின்றன.

**சேது அவைப்புலவர் :**

இங்ஙனம் தம்மைக் கவிச்சிங்கமவர்கள் புதுமைக் கருத்தமைந்த கவிகளால் புகழ்ந்து பாடியதைக் கேட்டு மகிழ்ந்த பொன்னுச்சாமித் தேவர் தமது அரண்மனை யிலேயே பேரவைப் புலவராக அமர்ந்து தமிழ் விருந்து ஊட்டி மகிழ்விக்குமாறு வேண்டிக் கொண்டார். அது முதல் நம் கவிச்சிங்கமவர்களும் சேது மன்னரின் அவையைச் சிறப்பிக்கும் புலவர் தலைமணியாய் விளங் கினார். அங்ஙனம் அமர்ந்த கவிச்சிங்கத்திற்குத் தேவ ரவர்கள் பலவகையான வசதிகளும் செய்துகொடுத்தார். குடியிருப்பதற்குரிய வீடும், ஊண், உடை, வண்டி,

வாகனங்கள் முதலிய பொருள்களும் கவிச்சங்கமவர் களின் வசதிக்கேற்பக் கிடைத்தன. கவிச்சிங்கமவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் நாள்தோறும் தமது கடமைகளை முடித்துக் கொள்வார். குறித்த காலங்களில் அரச மரியாதையோடு அரண்மனைக்குச் செல்வர். அருங்கலை அன்பராகிய பொன்னுச்சாமித் தேவரவர்களுடன் நிகரான ஆசனத்திலமர்ந்து அளவளாவுவர். பலவிதக் கவியமுதங் களையும் தேவரின் திருச்செவிகளில் பெய்து அவரை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துவார். பண்டைய இலக்கிய இலக்கண நயங்கள் குறித்தும் உலகியல் பற்றியும் உரை யாடி மகிழ்விப்பார். புலவர் பாடும் புகழுடையவராய் விளங்கிய பொன்னுச்சாமித் தேவரவர்களுக்கும், சேதுபதி யவர்களுக்கும் கவிச்சிங்கத்தின் நாவன்மை, கனியினும் கற்கண்டினும் சுவைமிக்கதாகக் காணப்பட்டது. புலவ ருடன் அளவளாவும் பெரும்பேற்றால் அவர்களுக்குப் பொழுது கழிவதே தெரியாமல் உம்பர் பகுதியில் உறைவ தாகவே எண்ணினர். இவ்வாறு மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் மாண்புமிக்க தமிழால் மன்னர்க்குக் களிப் பூட்டி வரும் நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சில பெரு வியப்பை அளிப்பனவாம். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

## சுவையான நிகழ்ச்சிகள்.

**பிழை பொறுத்தல் :**

ஒரு சமயம் நாவலரவர்கள் வழக்கம்போல் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தேவருடன் அளவளாவ அரண்மனைக்குச் சென்றார். அன்று அரண்மனை வாயிலைக் காத்து நின்றவன் புதிய சேவகன். நாள்தோறும் வழக்கமாக வரும் நாவலரவர்களை அவன் இன்னாரென்று அறியாதவன். அதனால் அவரை அவன் யாரோ புதியவர் என்றெண்ணி வழிமறித்து "உள்ளே செல்ல இது சமயம் அல்ல" என்று கூறித் தடுத்தான். இந்த நிகழ்ச்சியை வேறு பாராச் சேவகர்கள் பார்த்துவிட்டனர், புதிய சேவகனுக்கு என்ன நேருமோ? என்று பதை பதைத்தனர். ஓடி வந்து அப்புதியவனை நாவலர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செய்தனர். பின்னர் நாவலர் அரண்மனையுள் புகுந்தார். அரசரைக் கண்டு அளவளாவினார். இடையில் பாராச் சேவகன் தம்மை வழிமறித்த செய்தியையும் ஓர் பாடல் மூலமாக உணர்த்தினார். பாட்டின் பொருள் தெரிந்த தேவரவர்கள் சேவகன் மீது சினங்கொண்டு அவனைக் கூட்டிவரச் செய்து தண்டிக்க முனைந்தார். அப்பொழுது நம் நாவலரவர்கள் தேவரைத் தடுத்து "அரசே! அவன் புதியவன். பாராச் சேவகன் தானே! (தம்மை ஏற்கனவே அறியாத சேவகன்) தெரியாமற் செய்த பிழைக்கு அவனை மன்னியுங்கள்" எனக் கேட்டுக்கொண்டார். தேவரும் நாவலரின் வேண்டுதலுக்கிணங்கி அவனை மன்னித்தார். "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற்

பொறுப்பது கடனே" என்பதற்கேற்ப அவர் தம் பெருங் குணம் புலனாகின்றதன்றோ ?

**பொடிக் காரியம் ;**

நாவலரவர்கள் பொடியுறிஞ்சும் பழக்கமுடையவர். ஆதலின் எப்பொழுதும் அவரிடம் பொடி 'டப்பி' ஒன்று கைவசத்திலேயே இருக்கும். அவர் பொடி யுறிஞ்ச வேண்டிய நேரத்தில் அரசரோ அவையினரோ அறியாதவாறு சற்று மறைவாகவும் மரியாதையாகவும் பயன்படுத்துவது வழக்கம். ஒரு சமயம் அவர் அரச வையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தார். இடையில் அவருக்குப் பொடியுறிஞ்சும் நினைவு வந்தது. பொடி டப்பி'யைச் சுற்றுமுற்றும் தடவித்தேடலானார். ஆனால் அது கிடைக்கவில்லை. அதனை முன்னரே தேவர வர்கள் விளையாட்டாக நாவலர் அறியாமல் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டிருந்தார். தேவரிடம் உள்ள டப்பி நாவலருக்கு எவ்வாறு கிடைக்கும் ? அவர் தேடித் தேடிச் சலிப்படைந்தார். இதைக் கண்டு தேவர் பார்த்தும் பாராதவர் போல் நாவலரை நோக்கி "தாங்கள் ஏதோ ஒரு பொருளை மறந்து தேடுவது போல் தென்படு கிறதே! அப்பொருள் யாதோ ?" என்றனர். அதற்கு நாவலர் "புரவலர் பெரும ! தங்கள் திருமுன்னர் அது கூறக் கூடாத சிறு காரியம் !" என விடை கூறினர். ஆயின் அது பொடிக் காரியமோ ?" என்றார் தேவர். நாவலர் ஆம் ! என்றனர். தவறிய பொருள் மீண்டும் தங்கள் கைக்குக் கிட்டவேண்டுமாயின் ஒன்று செய்ய வேண்டும், அதாவது ஒரு வெண்பாவில் ஐந்துஇடங்களில்

பொடி என்ற சொல் வருமாறு அது முருகன் துதியாகவும் அமையப்பாடிக் கொடுத்தால் தங்களிடம் பொடி 'டப்பி'யை வரவழைத்துத்தருகின்ருேம் என்றனர். நாவலருக்குப் பொடியின் மீதுண்டான வேட்கையால் அக்கணத்திலேயே தேவர் கேட்டுக்கொண்டபடி ஒரு வெண்பாவைப் பாடிக்காட்டினுர். அப்பாடல் கேட்டு மகிழ்ந்த தேவர் ஏற்கனவே பொன்னுல் விலையுயர்ந்த கற்கள் பதித்துச் செய்யப்பட்ட பொடி 'டப்பி' ஒன்றை நாவலருக்குப் பரிசாக அளித்தார்.

**புலவர் தருக்கை அடக்கியது :**

ஒரு சமயம் வடநாட்டில் இருந்து தமிழ்ப் புலமையுடைய விசுவநாத பாரதி என்பவர் தென்னுட்டை அடைந்தார். தென்னுட்டில் பொன்னுச்சாமித் தேவரவர்களின் புலமை நலத்தையும் கொடை வளத்தையும் கேள்வியுற்று இராமநாதபுரத்தை அடைந்தார். அடைந்து சேதுபதி மன்னர் மீது தாம் பாடிவந்த பிரபந்தத்தை அரங்கேற்ற ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தேவரும் இதற்கு இசைந்து ஒரு நாளைக் குறிப்பிட்டு அரங்கேற்றத்திற்கு ஆவன வெல்லாம் செய்தார். குறித்த நாளில் தமிழ்வல்லாரும் மற்றும் பலரும் அவையில் பெருங்கூட்டமாய்க் கூடி இருந்தனர். அப்பேரவையில் கண்ணிழந்த கவிஞராகிய மாம்பழக் கவிச்சிங்கத்தின் கல்வித் திறமையை முன்னரே கேட்டறிந்தவர் ஆதலின் அவரைக் கண்டு மனம் திடுக்கிட்டார். அவர் அங்கிருப்பின் தமது நூல் அரங்கேற்றம் சிறப்பில்லாதொழியும் என்று எண்ணினுர். அதனுல்

அவர் பெரிதும் மனக்கலக்கம் அடைந்தார். இறுதியாக மனதைத் தேற்றிக்கொண்டு பொன்னுச்சாமித் தேவரை அனுகி "சபை மங்களமாயிருந்தால் நன்றாயிருக்கும்" என்றனர். தேவர் பாரதியாரின் உள்ளக் கருத்தை உணராமல் கூட்டத்தை உற்று நோக்கி "சபை மங்களமாகத்தானே இருக்கிறது?" என்றார். அதன்மேல் பாரதியாருக்குத் தம் கருத்தை வெளிப்படையாகக் கூறத் தைரியம் எழவில்லை.

அவையில் நிகழ்ந்த இந்தப்பேச்சை மாம்பழக் கவிஞர் தம் மதி நலத்தால் குறிப்பாக உணர்ந்து கொண்டு ஒன்றும் அறியாதவர் போல் இருந்தனர். பின்னர் பாரதியார் தாம் பாடி வந்த பாடல்களை அரங்கேற்றத் தொடங்கினர். நூறு செய்யுள்களையும் அவர் மூலபாடமாகப் படித்து முடித்து அச்செய்யுள்களுக்குப் பொருள் கூறவும் தொடங்கினர் அவ்வமயம் கவிச்சிங்கமவர்கள் மிகுந்த கோபமும் பதட்டமும் தோன்ற எழுந்து அவையிலிருந்த அரசரை நோக்கி "அரசே! இதென்ன அநியாயம்? என்ன துணிவு? சில ஆண்டுகட்கு முன்னரே யாம் ஒரு செல்வரின்மீது இப்பிரபந்தத்தைப் பாடித் தக்க பரிசுகளும் பெற்றிருக்கின்றோம் அப்பரிசு பெற்ற நூல் இவர் கைக்கு எட்டியது எவ்வாறோ? நூலின்பெயரைமட்டும் ஒருவாறு மாற்றிக்கொண்டு, குற்றமுள்ளோரைத் தண்டித்து நீதி வழங்கும் கொற்றவராகிய தங்கள் திருமுன்னர் இவர் அச்சம் சிறிதுமின்றி நூலை அரங்கேற்ற வந்தது ஒரு வியப்பேயாகும். புலவர்களுள் ஒருவர் இயற்றிய நூலை மற்றொருவர் கொள்ளையடிக்கும் குணங்கெட்ட செயலை

இதுகாறும் கண்டிலேன். இதைக்குறித்துக் கேள்விமுறை ஒன்றும் இல்லையா?" என முறையிட்டனர். அவையில் இருந்தோர் அனைவரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டனர். அந்தோ! பாரதியாரின் கவலையைப்பகரவும் வேண்டுமோ? அவர் செய்வதொன்றறியாமல் திகைத்து நம் கவிச்சிங்கத் தையேநோக்கி நின்றார். உடனே தேவரவர்கள் விசுவநாத பாரதியை நோக்கிப் "புலவீர்! கவிச்சிங்கமவர்கள் கூறியதைச் செவி மடுத்தீரா? அவர் கூறியதற்கு நீர் என்ன பதில் உரைக்கின்றீர்?" என வினவினார். உடனே பாரதியார் கவிச்சிங்கத்தைப் பார்த்து "இந்த நூல் உம்மால் இயற்றப் ட்டதாயிருப்பின் சிற்சில பாடல் களாவது சொல்லவருமல்லவா? அவ்வாறு சொல்வீரேல் உமது வார்த்தைகள் மெய்யென ஒப்புக்கொள்கிறேன்" என்று கூறினார். நம் கவிச்சிங்கமவர்கள் எதையும் கண் முன் கண்டவர்போல் கற்பித்துக் கூறும் ஆற்றல்பெற்ற "ஏகச்சந்தக்கிராகி" ஆதலின் பாரதியார் வினவிற்கு விடை இறுக்கத் தயங்காமல் "சிற்சிலவென்ன! நூல் முழுவதுமே கூறவல்லோம்" என்று கவிகள் தோறும் வேறு பெயர் அமைத்து முறைபிறழாமல் செய்யுட்கள் அனைத்தையும் சொல்லிக் காட்டினார். அத்துடன் அவர் இத்தனையாவது செய்யுள் இதுவெனவும் வரிகள் இன்னின்னவை இவையெனவும் விளக்கமாகவும், விரிவாகவும், தெளிவாகவும் எடுத்தோதினார். இவை யல்லாமல் புதிதாக இரண்டு செய்யுட்கள் இயற்றி அவற்றில் நூலின் பாடல், தொகை, அரங்கேற்றிய காலம், இடம், ஆகியவற்றையும் அமைத்துக் கூறினர்.

இவற்றைக் கேட்ட பாரதியார் அசைவற்று நெடு மரம் போல் நின்றார். அரசரும் அவையோரும் "ஈதென்ன கண்கட்டு வித்தையா? கடவுளின் சக்தியா?" என வியப்புற்றனர். தேவரும் சேதுபதியும் இந்த நிகழ்ச்சி யின் உண்மையை ஒருவாறு ஊகித்து உணர்ந்தனர். "ஏதோ ஒரு காரணம் கருதிக் கவிச்சிங்கம் அவர்கள் காட்டிய திறமைதான் இது" என்ற முடிவுக்கு வந்தனர். உடனே நாவலரை நோக்கி "கவிஞரே! தாங்கள் அன்பு கூர்ந்து உண்மையை உணர்த்தி எமக்குற்ற ஐயத்தை அகற்ற வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு நாவலர் இணங்கி "அடைந்தோரைக் காக்கும் அருந்தமிழ்ப் புரவலரே! இந்நூலை இயற்றியவர் பாரதி யாரே! இதற்கு ஐயம் ஒன்றும் இல்லை. ஆனால் இத்தமாறு பாடு நிகழ்ந்த காரணத்தையும் கூறுகின்றேன். இப் பாரதியார் நூலை அரங்கேற்றத் தொடங்கும் காலத்தில் "சபை மங்களமாய் இருத்தல் வேண்டும்" என்று கூறி னார். அது எம்மைக் குறித்தே எழுந்த வார்த்தை ஆகும். தாங்களும் அவையினரும் நாம் அவையில் இருப்பதைக் குற்றமாகக் கருதாமலிருக்க, இவருக்கு மட்டும் நமது இருப்பு அமங்களமாய்த் தோன்றியது. இவரது அறி யாமை அல்லது செருக்கு இவை இரண்டில் ஒன்றாய் இருக்கவேண்டும். ஆதலின் அத்தகைய செருக்கை அடக்குவதற்காகவே, யாம் இங்ஙனம் செய்தோம். அத் துடன் "ஏகசந்தகிராஹியம்" என்னும் எமது இயற்கை யான பழக்கத் திறமையைத் தாங்களும் இந்த அவையும் அறியவேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு செய் தோம்!" என்றனர். நாவலர் கூறியதைக் கேட்ட

அரசரும் அவையினரும் அதிசயித்து அகமகிழ்ந்தனர். பாரதியாரும் தமது கவலை நீங்கி முகமலர்ந்தார். பின்னர், அரசர் நாவலரை நோக்கி அந்நூலுக்கு விரிவாகப்பொருள் கூறி விளக்குமாறு வேண்டினர். நாவலரும் அவ்வாறே நூலின் பொருளை இனிமையாக விளக்கி யாவரையும் மகிழ்வித்தார். அரசர் அவ் வவையிலேயே இருவருக்கும் தக்க வெகுமதிகளை வழங்கிச் சிறப்புச் செய்தார்.

# நாவலரின் சிலேடைப் பேச்சு.

**மரப்படி :**

மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சிலேடையாகப் பேசி யாவரையும் மகிழ்விக்கும் திறமுடையவர். சிலேடை என்பது இருவகைப் பொருள்படுமாறு அமைவது. அவர் பல சமயங்களில் இவ்வாறு இரு பொருள்படப் பேசிக் கேட்போருக்கு வியப்பும் உவப்பும் ஊட்டியுள்ளார். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

ஒரு சமயம் பொன்னுச்சாமித் தேவரவர்கள் தம் அரசவை மண்டபத்தில் தனியே அமர்ந்து இருந்தார். அவ்வமயம் வழக்கப்படி நாவலரவர்கள் தேவரைக் காண வேண்டி அம் மண்டபத்திற்கு நடந்து சென்றார். மண்டபத்தின் தளவரிசை மரப்பலகைகளால் அமைக்கப் பட்டிருந்தது. நாவலருக்கு கண் தெரியாதாகையால் அவர் தம் கைத்தடியை அம் மரப்பலகையின் மீது தட்டித்தட்டி நடந்து சென்றார். அந்த ஓசையை உணர்ந்த தேவர் நாவலரைப் பார்த்துச் சற்றுப் பரிகாசம் தோன்ற "புலவீர்! என்ன? படி தட்டுகிறதோ?" என்று நகைப்புடன் கேட்டனர். நாவலர் "ஆசாரி" எனும் பத்தர் குலத்தினர் ஆதலால் தம் குலத்தொழிலான படி தட்டுவதைக் குறித்துதான் தேவர் தம்மைப் பரிகசிக்கிறார் போலும் என்று எண்ணினார். உடனே தாம் அவருக்குப் பரிகாசமாக விடைசொல்லி அவருடைய குலத்தைத் குறிப்பிட வேண்டும் என்ற கருத்தால்

வேடிக்கையாக "இருப்பினும் மரப்படிதானே! அது தட்டாது" என்று ரகரத்தைச் சற்று அழுத்தி ஒலித்து "மறப்படி" என்ற ஓசை தோன்றுமாறு கூறினர். இதில் தேவரவர்கள் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்பதைச் சொல்லாமல் சொல்லிக்காட்டியுள்ளாரல்லவா? இதைக் கேட்ட தேவரவர்கள் சட்டென இருக்கைவிட்டு எழுந்து வந்து நாவலருக்குக் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று தம் பக்கத்தில் அமர்த்திப் பாராட்டினர்.

**பணத் தட்டு:**

மற்றொரு சமயம் நாவலரின் புலமைத் திறத்தைப் போற்றிய தேவரவர்கள் தக்க பரிசு வழங்க விரும்பினர். விரும்பிய அவர், தம் வேலையாட்களிடம் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு இவை நிரம்பிய வெள்ளித்தட்டு ஒன்றைக் கொண்டு வருமாறு சொல்லி அனுப்பினர். அவ்வாறே மங்களப் பொருள் நிரம்பிய வெள்ளித் தட்டு தேவரின் முன்பு கொண்டுவந்து வைக்கப்பட்டது. அத் தட்டில் தாம் கருதிய தொகையைப் பரிசாக வைத்து நாவலரவர்களிடம் கொடுக்க முனைந்தார். அவர் கொடுக்க இருக்கும் தட்டு அழகான வெள்ளித் தட்டு என்பதை நாவலரின் அண்மையில் அமர்ந்திருந்த கையேடு எழுதும் மாணவன் குறிப்பாக அவருக்கு உணர்த்தினன். நாவலருக்கு பணத்துடன் அத்தட்டையும்பெறவேண்டும் என்ற அவா உண்டாயிற்று. தேவர் மகிழ்ந்து கொடுத்த அத் தட்டை அவர் கையேந்திப் பெற்றுக்கொண்டார். அவர் பரிசுப் பொருளை எடுத்துக்கொண்டு தட்டைத் திருப்பிக்

கொடுத்துவிடுவார் என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. பரிசுச் பொருளை எடுத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு வெள்ளித்தட்டை கையில் பிடித்துக்கொண்டார். ஆங்கு கூடியிருந்தவர் அனைவருக்கும் கேட்குமாறு "பணத்தட்டு அரசருக்கா ? நமக்கா ?" என்றனர். இக் கேள்வி யாவருக்கும் வியப்பளித்தது. சிறிது நேரம் விடைகூறத் தயங்கிய தேவர் நாவலரின் நோக்கத்தை அறிந்துகொண்டு "பணத்தட்டு தங்களுக்குத்தான்!" என்று பதில் கூறினர். பணத்தட்டு என்ற தொடர் "பணமுடை" என்ற மற்றொரு பொருள்படுவதால் தேவர் "பணத்தட்டு எமக்குத்தான் என்று கூற வாய் கூசினர். செல்வத்திற் சிறந்த அவர் அங்ஙனம் கூறியிருப்பாரேல் அது பொருத்த மற்றதாகவு மிருந்திருக்கும். தேவரின் விடையைக் கேட்டதும் நாவலர் மகிழ்ந்து அவ் வெள்ளித் தட்டைத் தம் மாணவனிடம் கொடுத்துப் பரிசுப் பொருளுடன் சேர்த்துக்கொள்ளுமாறு கூறினர். நாவலரின் இத் திறமை யாவரையும் மகிழ்வித்தது.

**ஈ வந்தது :**

பிறிதொரு சமயம் நம் நாவலரவர்கள் பாடல் பெற்ற தலமாகிய 'கொடுமுடி' என்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அவ்வூரில் தமிழ்ப் புலவராயிருந்தவர் இராசலிங்கக் கவிராயர் என்பவர். அக் கவிராயர் நாவலர் வந்துள்ள செய்தியை அறிந்து அவ்வரைக் காணச்சென்றார். சென்றவர் நாவலருக்கு வணக்கம் செலுத்தித் தம்மை அறிமுகப்

படுத்திக்கொண்டார். பின்னர் இருவரும் அளவளாவிக் கொண்டிருந்தனர், நாவலர் கவிராயரை நோக்கி "தங்கள் பெயர் யாதோ?" என்றனர். கவிராயரோ "அடியேன் பெயர் இராசலிங்கம்!" என்று இகரத்தைச் சற்று அழுத்தியே கூறினர். அதைக் கேட்ட நாவலர் "ஈ (இ) எங்கே வந்தது;" என்றனர். (ராசலிங்கம் என்று சொன்னலே போதும் என்பது கருத்து) அதற்கு கவிராயர் "மாம்பழத்திடம் ஈ வரத்தானே செய்யும்! அல்லாமலும் தமிழ் மணத்துக்கு ஈ வராமலிருக்க முடியாதே! மாம்பழத்தினிடத்துள்ள தமிழ் மணத்துக்கு ஈ வந்தது" என்றனர். இதைக்கேட்டு அங்குக் கூடியிருந்தோரனை வரும் மகிழ்ச்சியுற்றனர்.

**சாணம் போடு :**

பின்னர் கவிராயர் நாவலரைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்து செய்ய எண்ணித் தம் கருத்தை வெளியிட்டு வேண்டினர். அதற்கு நாவலரும் இசைந்து கவிராயரின் இல்லத்தை அடைந்தார். இருவரும் உணவு கொண்டனர். பாக்கு வெள்ளிலை போடத் தொடங்கிய பொழுது இராசலிங்கக் கவிராயர் ஆங்கு நின்ற வேலைக்காரியைப் பார்த்து, "அம்மா! நாவலர் உண்ட இடத்தில் சாணம் போடு! என்று ஏவி நகைத்தார். உடனே நாவலர் "சாணம் போடுவது வேலைக்காரிக்கு இயல்புதானே! புதிதாகக் கூறுவது தேவையில்லை! அல்லாமலும் அதைக் குறித்துச் சிரிக்கவேண்டியதும் இல்லையே!" எனத் தமக்குள் கருதி "ஆம் அம்மா!

சாணத்தை வேறெங்கும் போடாதே! ஐயா அவர்கள் சொன்ன இடத்திலேயே போடு" என்று சொல்லித் தாமும் சிரித்தார். இவ்வுரையாடலில் உண்ட இடம் வாய் எனவும் 'நாவலர் வாயிற் சாணம் போடு'' என்றதை மாற்றி "இவர் வாயிலேயே போடு வேறு எவ்விடத்தும் போடாதே"எனவும் பொருள்படுமாறு பேசிக்கொண்டது மற்றவர் கேட்டுச் சுவைக்கும் பேச்சாக விளங்கியது. இவ்வாறு நாவலரின் வாழ்க்கையில் எவ்வளவோ பல சுவையான பேச்சுக்கள் நிகழ்ந்துள்ளன. அவை விரிப்பின் பெருகும்.

## பிறர்க்கு உதவிய பெருங்குணம்.

நம் கவிச்சிங்கம் அவர்கள் சேது அவையைச் சிறப்பிக்குங் காலத்தில் தமது வாழ்க்கையை மட்டும் கவனித்துக்கொண்டிருக்கவில்லை. தம்மைச் சார்ந்தவர்களையும் முன்னேற்றுவதற்கு உதவிசெய்தார். இதனாலும் அவர் புகழ் நாடெங்கும் பரவியது. ஒரு சமயம் வேம்பத்தூரிலிருந்து புலவரொருவர் இராமநாதபுரத்துக்கு வந்தார். அவர் பெயர் 'சாமிநாத ஐயர்' என்பது. தமிழை ஒருவாறு படித்துச் சிறிது கவிபாடவும் தெரிந்திருந்தார் அவர். அவ் வேம்பத்தூர்ப் புலவருக்குத் தன் மூத்தமகள் திருமணத்தை முன்னிட்டுப் பெரும் பொருள் வேண்டியிருந்தது. அத்தகைய பொருளைச் சேது மன்னர்களைக் கண்டு கவிபாடினால் பெறலாம் என்று சிலர் அவருக்குக் கூறினர். அதனால் அவர் பொன்னுச்சாமித் தேவர் மீது கவிதை ஒன்று பாடிக்கொண்டு இராமநாதபுரத்தை அடைந்தார். அடைந்தவர் நேரே அரண்மனைக்குச் செல்லவில்லை. முன்னரே தமது ஊரில் தங்கி வந்த மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவைப்புலவராய் இருக்கும் செய்தியை அறிந்ததால் முதலில் அவரைப் பார்த்து அவருடைய ஆதரவுடன் தேவரைக் காணலாமெனக் கருதினார். அவ்வாறே நாவலர் தங்கியிருந்த இல்லத்தை நாடிச் சென்றார்.

வேம்பத்தூர்ப் புலவரின் வருகையை ஆங்குள்ள வேலைக்காரன் ஒருவன் நாவலருக்குத் தெரிவித்தான். வந்த புலவரை நல்வரவு கூறி நாவலர் வரவேற்றார். இருவரும் சிறிது நேரம் அளவளாவினர். இறுதியில் தம்மை நாடி

வந்த காரியம் யாதென நாவலர் உசாவினர். உடனே நாவலரை நோக்கி வேம்பத்தூர்ப் புலவர் " இனி யான் கூறக்கூடியவைகளை எவ்வாறு கூறுவது என்றெண்ணித் தயங்குகிறேன் " என்றனர். உடனே நாவலர் "தாங்கள் வந்த காரியத்தை என்னிடம் தயக்கமின்றிக் கூறலாம் " என்றார். நாவலரின் இந்த மொழிகளைக் கேட்டவுடன் புலவர் பெருமகிழ்ச்சியடைந்து அவரை நோக்கி, "தங்களைப் போல் அருங்குணம் படைத்தவர்களைக் காண்பதே அருமை ! தங்களின் ஆதரவைப் பெறவேண்டு மென்றே யான் இங்கு வந்தேன், எனக்கு இரண்டு ஏக்கர் நிலமிருக்கிறது. ஆனால் அதன் வருமானமோ மிகக் குறைவு. அதனால் யான் வறுமையாளனாகவே வாழ்ந்து வருகிறேன். தற்போது என் மகள் திருமணம் நடைபெற வேண்டியிருக்கிறது. அதற்கு என் சக்திக்கு மேற்பட்ட பணம் தேவையாகவுமிருக்கிறது. இதற்கு என்ன செய்வ தென்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது என் நண்பர்கள் சிலர் நம் தேவரவர்களைக்கண்டு கவிபாடினால் போதிய பொருள் கிடைக்குமென்று சொன்னார்கள். அவர்கள் கூறியபடி தேவரின் மீது ஓர் கவியைப் பாடிக் கொண்டு இங்கு வந்தேன். வந்தவுடன் தங்களின் அருமை பெருமைகளைக் கேள்வியுற்று முதலில் தங்களைப் பார்த்துத் தாங்கள் கூறும் கருத்துப்படி நடக்கலாமென்று முடிவு செய்தேன். நான் கூறக்கூடிய செய்தி இவ்வளவுதான். இனிமேல் தாங்கள் காட்டும் வழியில் நடப்பேன்" என்று உருக்கமாகக் கூறினார்,

ஐயரவர்களின் மொழிகள் நாவலரின் உள்ளத்தை இளக்கிவிட்டன. உடனே ஐயரை நோக்கி "ஐயா !

தாங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். என்னால் இயன்ற உதவியைத் தங்களுக்குச் செய்கின்றேன். தங்களைப்பற்றித் தேவரவர்களிடம் கூறித் தங்கள் மகளின் திருமணத்திற்குப் பொருள் உதவும்படி செய்கிறேன்" என்று ஆறுதல்கூறி ஐயர் எழுதி வந்துள்ள கவிதையைப் படித்துக் காட்டும்படி கூறினார். ஆனால் ஐயரோ அக் கவிதையைப் படித்துக்காட்ட அச்சமும் தயக்கமும் அடைந்தார். அதைக் குறிப்பாலறிந்த நாவலர் ஐயரை நோக்கி "தாங்கள் சிறிதும் தயங்காமல் தங்களின்கவியைப் படியுங்கள்! எல்லாம் அறிந்தவரும் இல்லை. ஏதும்அறியாத வரும் இல்லை. எல்லோரும் பிறவியிலேயே கவிஞராகிவிட முடியுமா? ஆதலால் தங்களின் கவிதையை என்னிடம் படித்துக் காட்டுங்கள்!" என்றனர். இங்ஙனம் நாவலர் கூறிய தேறுதல் மொழிகளைக் கேட்ட ஐயர் அச்சம் நீங்கப் பெற்றுத் தம் கவி எழுதப் பெற்றிருந்த சுவடியை எடுத்துப் பிரித்து,

**"வீதிதோறு மாடஞ் சிறக்க விளங்கிடுதென் புதுவை வாழும்**
**நாதியிலை எனவந் தார்க்கு நல்குபொன்னுச் சாமி வேந்தே!**
**சேதியொன்று செப்பக் கேளும் செகத்தினிற் பலரைப் பாடி**
**பாதிவலி குன்றி னேற்குப் பரிசுமிக அருளு வாயே!"**

என்று படித்துக் காட்டினார்.

இக் கவிதையைக் கேட்ட நாவலரவர்கள் உள்ளூரச் சிரித்துக்கொண்டார். இப்பொழுதுதான் ஐயர் பாடல் பாடப் பழகுகின்றார் போலும்! என எண்ணினர். ஐயரை நோக்கி "தங்கள் கவிதை எளிதாகவும், நன்றாகவும்

இருக்கின்றது. ஆனால் முதலடியிலுள்ள "வீதி தோறு மாடஞ்சிறக்க" என்னும் தொடரை மட்டும் மாற்றி 'வீதிதோறு மாகூடம்' எனத் திருத்திக்கொள்ளுங்கள்! அப்படித் திருத்தாவிடில் "வீதி தோறும் மாடு ஐந்து இறக்க" என்னும் அமங்கலப் பொருள்பட்டுக் கவிதை சிறப்பில்லாமல் போய்விடும்" என்றார். ஐயரோ திடுக்கிட்டுப் போய்விட்டார். நாவலர் கூறியபடி தம் கவிதையைத்திருத்திக்கொண்டார். பின்னர்நாவலரவர்கள் தமக்குத் தெரிந்த நண்பரான பஞ்சு ஐயர் என்பவரை அழைத்துவரச் செய்து வேம்பத்தூர்ப் புலவர்க்கு அவர் தங்கியிருக்கும் வரை உண்டியும், உறையுளும் உதவி உபசரிக்குமாறு வேண்டிக்கொண்டார். பஞ்சு ஐயரும் நெஞ்சம் மகிழ்ந்து வேம்பத்தூர்ப் புலவரை வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரிக்கலாயினர். அன்றிரவு கழிந்தது.

மறுநாள் காலை நாவலரும் ஐயரும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பொன்னுச்சாமித் தேவரவர்களைக் காணப் புறப்பட்டனர். போகும் முன்னர் நாவலர் ஐயரை நோக்கி "தாங்கள் எழுதியுள்ள கவியை நான் 'படியுங்கள்' என்று சொன்னவுடன் இசையுடன் நிறுத்திப் படித்துக் காட்டுங்கள்! தேவரவர்கள் கல்வியிற் சிறந்தவர், ஆதலால் அவர் ஏதேனும் கேள்வி கேட்டால் அதற்கு மட்டும் பொருத்தமான விடையைச் சொல்லுங்கள்!" என்றுகூறி வைத்தார். பிறகு நாவலர் தமக்குத் துணையாக இருக்கும் சிறுவனின் கையைப்பிடித்துக்கொண்டு அவன்வழிகாட்ட அரண்மனையை நோக்கி நடந்தார். வேம்பத்தூர்ப்புலவரும்

அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். சென்றவர்கள் தேவர் வீற்றிருக்கும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். நாவலர் வருகையைக் கண்டதும் தேவர் எழுந்து நின்று நல்வரவுகூறி இருவரையும் இருக்கையில் அமரச்செய்தார். பின்னர் தேவரவர்கள் நாவலருடன் வந்த புலவரைக் குறித்து உசாவித் தெரிந்துகொண்டார்கள்.

நாவலரவர்கள் தேவரிடம் ஐயர் வந்துள்ள நோக்கத்தையும் அவருக்கு உதவ வேண்டிய முக்கியத்தையும் விளக்கமாகத் தெரிவித்தார். அத்துடன் ஐயர் எழுதி வந்துள்ள கவிதையைப் பற்றியும் கூறினர். அனைத்தையும் அமைவுறக் கேட்டுக்கொண்டிருந்த தேவர், ஐயர் இயற்றி வந்துள்ள கவிதையைக் கேட்க விரும்பினர். தேவரின் விருப்பத்தை தெரிந்த நாவலர், கவிதையைப் படித்துத் தேவரிடம் கொடுக்குமாறு ஐயருக்குக் கூறினர். உடனே ஐயர் அக் கவியை இசையுடன் நன்ருகப் படித்துத் தேவரிடம் கொடுத்தார். தேவரும் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டதோடு ஐயரின் தமிழறிவையும் ஒருவாறு உணர்ந்தார். எனினும் தமிழ் கற்றவர்களைத் தேவரவர்கள் ஊக்கும் நோக்கமுடைவர். ஆதலின் ஐயர் பாடிவந்த கவிதையில் "செகத்தினிற் பற்பலரைப் பாடிப் பாதிவலி குன்றினேற்குப் பரிசுமிக அருளுவாயே" என்னும் தொடரை அறிந்து மனம் உருகினர். ஐயருக்குப் பொருளுதவ வேண்டுமெனவும் முடிவு செய்தார்.

உடனே ஐயரை நோக்கி "தங்களுக்கு எவ்வளவு பொருள் தேவையாயிருக்கும்?" என்ருர். ஐயர் சற்றுத்

தயக்கத்துடன் " ஐந்நூறு ரூபாய் வேண்டியிருக்கும் " என்றனர். நாவலரோ "இவ்வளவுகூட இல்லாமல் ஒரு திருமணத்தை நடத்த முடியாதே!" என்று ஐயருக்கு ஆதரவு கூறினர். இதைக் கேட்ட தேவர், " தங்கள் விருப்பப்படியே ஆகும் செலவை நம் அரண்மனைக் கணக்கப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள். என முகமலர்ந்து மொழிந்தார். ஐயருக்கும் நாவலருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தமது வாக்குறுதி பலித்ததற்காக நாவலர் தேவரை ஒரு கவிதையினுல் வாழ்த்தினர்.

**"சேயே யனையர் செழும்புலவோ ரீன்றெடுத்த**
**தாயே யனையைநீ பொன்னுமன்ற! — தூய**
**கனங்கொடுத்தன் ஞேர்மேற் கனியுமன் பாலுண்ணத்**
**தனங்கொடுத்து நீ வளர்ப்ப தால்!"**

பின்னர் ஐயரும் நாவலரும் தேவரவர்களிடம் சற்றுநேரம் உரையாடிக்கொண்டிருந்துவிடைபெற்று வீடுதிரும்பினர். நாவலரவர்களின் 'பிறர் நலம்பேணும்'பெருங்குணத்துக்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? நாவலரின் நல்லுதவியால் விரும்பிய பொருளைப் பெற்ற சாமிநாதய்யர் அவருடைய புலமையாற்றலையும் பெருங் குணத்தையும் புகழையும் கண்டு விம்மிதமடைந்தார். தமது மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் நாவலருக்குச் செலுத்தி விடைபெற்று வேம்பத்தூர் மீண்டார். நாவலர் வழக்கம்போல் நாள்தோறும் அரசவையை அலங்கரித்து வந்தார்.

卐

# சேது மன்னர்களிடம் விடைபெறுதல்.

இவ்வாறு பல திங்களாக இராமநாதபுரத்தில் தங்கிச் சேது அவையைச் சிறப்பித்து வந்த நமது நாவலரவர்கள் தமிழ் நாட்டின் வேறு பல நகரங்களுக்கும் சென்று தம் புலமை நிறுவிக் கல்விக்கொடி நாட்டக் கருதினர். தம் கருத்தைத் தக்க சமயம் அறிந்து சேது மன்னர்களிடம் கூறி விடை தருமாறு வேண்டினர். மன்னர்களுக்கோ மாம்பழக் கவிஞரின் பிரிவு மாபெரும் மனத்துன்பத்தை அளித்தது எனினும் நாட்டிற்குரிய கவிஞரை ஒரு வீட்டிலேயே தங்கவைப்பது எளிதோ? எனவே அவர்கள் நாவலருக்கு உயர்ந்த பரிசுகள் பலவற்றை வழங்கிப் பிரியா விடை நல்கினர். நாவலரவர்கள் சேது வேந்தர்களை மீண்டும் சிறப்பித்துப் பாடி வாழ்த்தி வழிப்பயணம் கொண்டார். பயணம் கொண்ட பாவலர் சென்னை, திருநெல்வேலி, தஞ்சை, கோயம்புத்தூர், சேலம் முதலிய மாவட்டங்களிற் சிறந்து விளங்கிய குறுநில மன்னர்களையும், செல்வர்களையும் கண்டு பல செந்தமிழ்க் கவிகளும், சீட்டுக் கவிகளும் பாடி அவர்களின் மதிப்புக்குரிய பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றனர்.

**வேளுக்குறிச்சியில் :**

சேலம் மாவட்டத்தில் வேளுக்குறிச்சி என்பது சிறந்த ஊர்களில் ஒன்று. அதைக் குறுநில மன்னராக இருந்து அந்நாளில் ஆட்சிபுரிந்தவர் வேலப்பக் கவுண்டர். அவரது தமிழ்ச்சுவை நுகரும் தகைமையையும்

புலவர்களைப் பேணும் பெருந்தன்மையையும் கேள்வியுற்ற நம் நாவலர், அவரிடம் சென்றார். நாவலரின் வருகையறிந்து வேலப்பக் கவுண்டர் மிக மகிழ்ந்து வரவேற்றார். தம்முடன் நாவலரை இரண்டொரு திங்கள் இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அதற்கு இசைந்து நாவலரும் ஆங்குத் தங்கினர். கவுண்டரின் கொடைத் தன்மையும் குணச்சிறப்பும் நாவலரின் உள்ளத்தை ஈர்த்தன. அதனால் அவர்மீது "சந்திர விலாசம்" என்னும் சுவைநிறைந்த பிரபந்தத்தையும் பல இனிய தனிநிலைக் கவிகளையும் இயற்றினர். புலவரால் புகழ்பெற்ற வேலப்பக் கவுண்டர் அவருக்கு விருப்பமான பரிசுகள் அனைத்தையும் கொடுத்துச் சிறப்புறச் செய்து அனுப்பினர்.

★

## இறைவன் திருவடி எய்துதல்.

இவ்வாறே நம் நாவலரவர்கள் பலரையும் கண்டு பாடிப் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்து பின்னர் தம் சொந்த ஊராகிய பழனியம்பதிக்குத் திரும்பி னார். ஆங்குத் தங்கிப் பல இனிய துதி நூல்களை இயற்ற லாயினர். இப் புலமையாளர் தமது 27-ம் வயதில் திருமணம் புரிந்துகொண்டார். இல்லறத்தை நல்லறமாக நாளும் நடத்தினர். இம்மையுலக இன்பங்களை எல்லாம் இனிதே துய்த்தார். பின்னர்ச் சிலகாலம் சென்றதும் அவர் உடலில் மேகநோய் பற்றியது. அதை நீக்குமாறு குமரனைக் குழைந்து குழைந்து பல கவிகளால் பாடி இறைஞ்சி நோய்நீங்கப்பெற்றுப் பல ஆண்டுகள் முருகனை மறவாத செம்மனத்துடன் வாழ்ந்து தமது 48ம் வயதான 1884ம் ஆண்டு ஓர் நன்னாள் இரவில் தம் உற்றார், உறவினர், மாணவர், மற்றவர் யாவரும் சூழ்ந்து புலம்பி வருந்த இறைவன் திருவடி எய்தினர். எய்துமுன் அவர் பாடிய பாடல்:

> **"என்னபிழை யான்செய் திருந்தாலு மெண்ணுமை**
> **லன்னபிழை யெல்லா மகற்றியின்னே — நின்னுபய**
> **பாதநிழல் நல்கியெனைப் பாவித்துக் கொள்சமயம்**
> **தீ த கு க னேநம்பி னேன்"**

என்பதாகும்.

அந்தோ! நாவலர் பிரிந்த செய்தி நாடெங்கும் பரவி யது. புலவர் வருந்தினர்! கவிஞர் கலங்கினர்! புரவலர் பெருந் துன்புற்றனர்! தமிழ்நாடு கம்பன் போலவும்

காளமேகம் போலவும் 19-ஆம் நூற்றூண்டில் இணையற்று விளங்கிய இனிமைக் கவிச்சிங்க நாவலரை இழந்தது. ஆயினும் அவர் நாட்டுக்கு வழங்கிச் சென்ற நற்செல்வ மான கவிதை நூல்கள் அழியவில்லை. அவர் பாடிவைத்த தனிப் பாக்களையும் பனுவல்களையும் அவர்தம் மரபினரும் உறவினருமான மார்க்கையன்கோட்டைப் புலவர் "பழனிச்சாமி ஆசாரியார்" அவர்கள் தேடிச் சேர்த்துத் தொகுத்து நூலாக அச்சிட்டிருக்கின்றனர். ஆனுல் அக் கவிகளின் பொருளுணர்ந்து படித்துச் சுவைக்கும் புலவர்கள் இந்நாளில் அருகிக் காணப்படுகின்றனர். தக்க புலவர்கள் அக்கவிகட்கு எளிய முறையில் உரைவரைந்து உதவவேண்டும். எல்லோரும் படித்துச் சுவைத்து இன்புறச்செய்ய வேண்டும். புதுமை மோகத்தில் பழைமைக் கவிஞர்களின் பாக்களையும் நோக்கத்தையும் தமிழகம் மறந்துவிடுதல் கூடாது.

# நாவலர் இயற்றிய நூல்கள்.

நமது மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றிய நூல்கள் யாவும் கவிதை நூல்களே. உரைநடை நூல் ஒன்றேனும் கிடைத்திலது. கவிதை நூல்களும் பெரும்பாலான தெய்வத் துதி நூல்களே. வள்ளல்கள் மீதும் குறுநில மன்னர்கள் மீதும் அவர் பாடிய தனிநிலைக் கவிகளும் சீட்டுக்கவிகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன. குறிப்பாக இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களாம் பொன்னுச்சாமித் தேவர் மீது ஐம்பத்து மூன்றுகவிகளையும் முத்துராமலிங்க சேதுபதி மீது முப்பத்தொரு கவிகளையும் நாவலர் பாடியுள்ளார்.

நாவலர் தமிழோடு வடமொழியும் நன்கு பயின்றவரா தலால் அவ் வடமொழிச் சொற்கள் அவருடைய கவிதை களில் மிகுதியும் இடம்பெற்றுள்ளன. ஆயினும்கவிதைகள் சொல்லழகும் பொருட் பொலிவும் ஓசையின்பமும் நிறைந்து கற்பார்க்குக் களிப்பூட்டுவனவாய் உள்ளன. அவர் பாடினவாகத் தொகுக்கப்பட்ட பிரபந்தத்துள் காணப்படும் நூல்கள் பின்வருவனவாம்.

1. விநாயகமூர்த்தி பதிகம் 2. சரசுவதியம்மன் பஞ்ச ரத்தினம் 3. சந்தப்புகழ் 4. பழனிப் பதிகம் 5. குமரகுரு பதிகம் 6. சிவகிரிப் பதிகம் 7, திருச்செந்திற் பதிகம் 8. பழனி நான்மணி மாலை 9. திருப்பழனி வெண்பா 10. பழனி வெண்பா அந்தாதி 11. பழமூபுரிமாலை 12. குமரனந்தாதி 13. சிவகிரி யமகவந்தாதி 14. பழனிக்

கோவில் விண்ணப்பம் 15. தயாநிதிக் கண்ணிகள்
16. ஆனந்தகீத ரசம் 17. துதிப் பாசுரத்தொகை
18. திருவருட் சமூக விலாசத்துதித்தமிழ் 19. சுரஜதி
20. திருவோலக்கச் சிறப்பு 21. சிங்கார ரசமஞ்சரி
22. சந்திர விலாசம் 23. தனிச் செய்யுட் கோவை
24. தங்கப் பாட்டுக்கள்.

மேற் குறித்தவையல்லாமல் "தேவாங்க புராணம்". என்னும் கவிப் பெருமையும் கற்பனைச் சுவையும் நிறைந்த சிறந்த நூல் ஒன்றையும் நாவலர் இயற்றியுள்ளார்.

## அரசன்-சண்முகனார்.

**தோற்றம் :**

உழவனை நினைவுபடுத்தும் எளிய உருவம். அதற்கும் ஆடம்பரத்திற்கும் சிறிதும் தொடர்பில்லை. இடுப்பிலே நான்குமுழ வேட்டி, கழுத்தைச் சுற்றிலும் மூன்றுமுழத் துண்டு. வெயிலுக்கும், மழைக்கும் பனிக்கும் பாதுகாப்பு அறியாத உடம்பு. பண்ணையில் பாடுபட்டுழைக்கும் பகட்டு அறியாத பாட்டாளி மகனின் குடுமி. எப் பொழுதோ நினைத்துக்கொண்டால் செய்து கொள்ளும் சவரம், சுருங்கக் கூறின் நாட்டுப் புறத்து மனிதருள் ஒருவரோ என்று எண்ணும்படியான தோற்றம். இத் தகைய தோற்றத்தோடு இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவராய் விளங்கியவரே நம் அரசன் சண்முகனார் ஆவர். இவர் தோற்றத்தால் எளியராயினும் அறிவாற்றலால் பெரியராகத் திகழ்ந்தார். தன்னடக்கத் தால் தமிழ்ப் பேரறிவை மறைத்துக்கொண்டு ஒதுக்கமாய் வாழ்ந்த புலவர் இவர். இலக்கணப் புலமையில் இவருக்கு இணை இவரேதான் என்பது ஆன்றோர் பலரின் கருத்து. குண்டூசியினும் கூர்மையான அறிவு படைத்தவர் சண்முகனார்: எனப் புலவர் உலகம் அவரைப் புகழ்ந்து போற்றியது. அரிதின் ஆராய்ந்து கண்ட தமிழ்நூற் கருத்துக்களை எவர்க்கும் அஞ்சாது எழுத்தானும் பேச்சானும் எடுத்து விளக்கியவர் இப்புலவரேறு. இத் தகைய **புல**மையாளரின் வரலாறு, படித்துச் சுவைக்கத் தக்க பான்மையது அல்லவா ?

**முன்னோர் :**

நம் அரசஞ் சண்முகனார் சோழவந்தான் என்னும் ஊரிலே பிறந்தார். அவ்வூர் மதுரைக்கு மேற்கே பதின் மூன்று கல் தொலைவில் உளது. ''வையை என்னும் பொய்யாக் குலக்கொடி'' என இலக்கியப் புகழ்பெற்ற வையை யாற்றின் மருங்கே வளம் பலவுங்கொண்டு திகழ்வது. இதனைக் காண்பார் சோழநாட்டின் ஊர் களுள் ஒன்றோ! என எண்ணும்படியான செழிப் புடையது. இவ்வூரிலே சற்றேறக்குறைய முன்னூறு யாண்டுகட்கு முன்னர்த் திருநெல்வேலி மாவட்டத் தினின்றும் சைவ வேளாளக் குடும்பத்தினர் சிலர் குடி யேறினர். அக்குடும்பத்தினருக்குச் சண்பகம் பிள்ளை யென்பார் தலைவராவர். பிற்காலத்தில் அச் சண்பகம் பிள்ளையின் வழித்தோன்றலாய் இராமு பிள்ளை என்பவர் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அவருக்கு மகனாய் வந்த ''அரசப்பர்'' என்பாரே நமது சண்முக னாரின் அருமைத் தந்தையார் ஆவர்,

**பெற்றோர் :**

அரசப்பர் அறிவும் அதற்கேற்ற அரும்பண்புகளும் வாய்ந்த இளைஞராய்த் திகழ்ந்தார். அவருக்குத் திருமணப் பருவம் வந்துற்றது. நற்குண நங்கை யொருத்தியை வாழ்க்கைத் துணையாக வரிக்க அவர் விரும்பினார். அவ ருடைய தாய்தந்தையர் பல ஊர்களுக்கும் சென்று பெண் பார்த்து வந்தனர். இறுதியில் 'பனையூர்' என்னும் பதியில் ஓர் பெண்ணிருப்பதாக அறிந்து ஆங்குச் சென்றனர்.

அவ்வூரில் குலத்தாலும் நலத்தாலும் கல்வியாலும், செல்வத்தாலும் சிறந்து விளங்கியவர் வீரபத்திர பிள்ளை என்பவர். அவர் தாய்மொழிப் பற்றும் சமயப் பற்றும் வாய்ந்த தக்கார். அவ்வத் துறைகளிலே வல்ல பெரியார்கள் வந்தால் நல்வரவு கூறி நலம் பல செய்து போற்றும் பெருங்குணம் படைத்தவர். அவருக்கு அப்பொழுது "பார்வதி" என்னும் பெயருள்ள பெண்மணி பருவமெய்தித் திகழ்ந்தனள். தந்தையைப் போன்றே நற்குண நற்செயல்களில் நாட்டமுள்ள அந் நங்கை நல்லாளை அரசப்பருக்கு மணம் பேசி முடித்தனர். நல்ல நாள் ஒன்றில் இருவருக்கும் திருமணம் இனிதாக நடைபெற்றது.

பிறப்பு.

அன்று முதல் மணமக்கள் இருவரும் மனமொத்து வாழ்ந்தனர். அவர் நடாத்திய இல்லற வாழ்வின் பயனாய் நம் சண்முகனார் 1868-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 15-ஆம் நாளில் பிறந்தார். பெற்றோர் பிறந்த குழந்தையைக் கண்டு பேருவகையடைந்தனர். காண வந்த கற்றோர் சண்முகனாரின் முகப் பொலிவை நோக்கி "இவன் பிற்காலத்திலே பேரறிஞனாகத் திகழ்வான்" என மகிழ்ந்து வாழ்த்தினர். தம்மினும் தம்மக்கள் அறிவுடையராய் வாழ்தல் இம்மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்பதை ஓர்ந்து தாய்தந்தையர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

**குழந்தைப் பருவம் :**

நம் சண்முகனுர் குழந்தைப் பருவத்தில் "குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி, இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தும்" விளையாடிப் பெற்றோர்க்குப் பேரின்பம் விளைத்தார். இளமையில் எவ்வளவு சுறுசுறுப்புடன் காணப்பட்டாரோ அவ்வளவு சிறு சிறு குறும்புகளும் செய்து வந்தார். ஆனல் அவற்றைப் பெற்றோர் பெரிதெனக்/ கருதவில்லை. தம் மைந்தனைப் பாராட்டிச் சீராட்டிப் பாலூட்டித் தாலாட்டிச் செல்லப் பிள்ளையாய் வளர்த்து வரலாயினர். இங்ஙனம் வளர்க்கப்பட்ட சண்முகனுர் ஐந்தாண்டுப் பருவத்தை அடைந்தார். தம் மகனைச் 'சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை' அல்லவா ? இதையுணர்ந்த அரசப்பர் தம் அருமந்த மகனைப் பள்ளிக்கனுப்பிக் கல்வி கற்பிக்க எண்ணினுர்.

★

# கல்விப் பயிற்சி.

**பிள்ளையார் கோவிலில் :**

சோழவந்தானில் "கல் மண்டபம்" என வழங்கும் பிள்ளையார் கோவில் ஒன்றுண்டு. அந்நாளில் அக் கோவிலில் திண்ணைப் பள்ளி வைத்து நடத்தி வந்தவர் அழகர்சாமித் தேசிகர் என்னும் ஆசிரியர். அவர் போதிய தமிழறிவு படைத்தவர். அவரிடம் அரசப்பர் தம் மகனை அழைத்துச் சென்றார். ஆசிரியரையணுகித் தம் கருத்தை யறிவித்துச் சண்முகனாருக்குக் கல்வி கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். தேசிகரும் அவர் வேண்டு கோளுக்கிணங்கி அன்றுமுதல் சண்முகனாருக்குக் கல்விப் பயிற்சி யளிக்கத் தொடங்கினார். முதலில் அக்கால முறைப்படி உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர் மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றையும், பின்னர் சொற்களையும், சொற்றொடர்களையும் படிப்படியாக அவ்வாசிரியர் கற்பித்தார். சண்முகனாரின் இளமைக் கல்விக் காலம் ஓராண்டுகூட ஓடவில்லை. அவர் கற்ற கால அளவு குறைவேயாயினும் கருத்துடனேயே கற்றார். ஆனால் தொடர்ந்து அடங்கி ஒடுங்கிப் படிக்க அவர் விரும்பவில்லை. விளையாட்டின்மீது கொண்ட வேட்கை யால் சில திங்களில் பள்ளியைவிட்டு நின்றுகொண்டார். தந்தை அரசப்பர் என் செய்வார்? பள்ளி செல்ல மறுக்கும் பிள்ளையின் பிடிவாதத்தைக் கண்டு பெரிதும் வருந்தினார். செல்வமாய் வளர்க்கப்பட்ட மைந்தனைச் சினந்து கண்டிக்க அவர் மனம் ஒப்பவில்லை. " அறிவு

வரும்போது அவன் படித்துக்கொள்ளட்டும்" என்று வாளா இருந்துவிட்டார். இங்ஙனம் ஐந்து முதல் பண்னிராண்டுகள் வரை பள்ளிக்குப் போகாமல் பருவத்தைப் பாழ்படுத்தினுர் சண்முகனுர், விரும்பும்போது வீட்டிலுள்ள நூல்களை எடுத்துப் படிப்பதும் விரும்பாதபோது வெளியில் சென்று விளையாடித் திரிவதும் அவருக்குப் பழக்கமாகி விட்டன.

### கிண்ணிமடத்தில் :

சண்முகனுருக்கு விட்டகுறையை மீண்டுந் தொட்டு நிறைவாக்கும் வேளைவந்தது. சோழவந்தானில் 'கிண்ணி மடம்' என்ற பெயரால் இன்றும் இரண்டு மடங்கள் இருந்து வருகின்றன. ஒன்று ஊரின் இடையேயுள்ளது. மற்ருென்று ஊரின் வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. ஊரின்கண் உள்ள மடம் சண்முகம் பிள்ளை மரபார்க்கு உரிமையானது. அம் மடம் ஆண்டுகள் பலவாய்க் கண்காணிக்கப் படாமல் பழுதடைந்து பய னற்றுக் கிடந்தது. முன்னேர் நிறுவிய மடத்தின் நிலையை எண்ணி வருந்தினர் அரசப்பர். இனியேனும் மடத்தின் நடைமுறைகள் சிறப்பாய் நிகழ வழிவகுக்க வேண்டு மென அவர் உறுதி கொண்டார், அன்று முதல் அம் மடத்தின் பொறுப்பை ஏற்று நடத்தத் தக்க பெரியார் ஒருவரையும் தேடிக்கொண்டிருந்தார். இறுதியில் தமது மாமனுர் வீரபத்திர பிள்ளையவர்களின் ஊரில் அவருடைய ஆதரவில் இருந்துவந்த சிவப்பிரகாசர் என்னும் செந்தமிழ்த் துறவியை அடைந்தார். அப் பெரியாரிடம் தாம்

வந்த கருத்தை விண்ணப்பித்துச் சோழவந்தானுக்கு வருமாறு வேண்டிக்கொண்டார். மருகரின் வேண்டு கோளுக்கு வீரபத்திர பிள்ளையவர்களும் துணையாயிருந்து சிவப்பிரகாசரை அரசப்பருடன் அனுப்பிவைத்தார். இருவரும் பெரு மகிழ்வுடன் அளவளாவிப் பேசிக் கொண்டே சோழவந்தானை அடைந்தனர்.

**சிவப்பிரகாசர் சிறப்பு :**

கிண்ணி மடத்தை நண்ணிய சிவப்பிரகாசர் அதன் பொறுப்பை ஏற்றுச் சிறந்த முறையில் கண்காணிக்கத் தொடங்கினர். அவர் இளமை தொட்டே இலக்கிய இலக்கணப் பயிற்சி மிக்கவர். சைவத் திருமுறைகளின் சாரத்தையுணர்ந்தவர். சோதிடக் கலையையும் துருவித் தேர்ந்தவர். இங்ஙனம் கற்பவற்றைக் கசடறக் கற்றுத் தம் ஐம்புலன்களையும் அறிவால் அடக்கி நிற்றற்குரிய நன்னெறியிலே வழுவாத மெய்யடியார். தென்னுடைய சிவனின் திருவடியை எந்நாளும் மறவாச் சிந்தையாளர். தாமுணர்ந்த கல்வி கேள்விச் செல்வங்களைக் கருதுவார் எவர்க்கும் விழைந்து வழங்கும் மேன்மையாளர். இத்தகைய பெருந்தகையரான சிவப்பிரகாசர் தங்கியுள்ள கிண்ணி மடத்திற்கு அறிவுடையார் பலர் அடிக்கடி வந்து அடிகளுடன் அளவளாவிச் செல்வது வழக்கமாயிற்று. சிவப்பிரகாசர் பொறுப்பேற்றதுமுதல் அம்மடம் தமிழும் சைவமும் கமழும் கலைக்கூடமாய் விளங்கியது. இவ்வாறு மடத்தை மாண்புறக் காக்கும் சிவப்பிரகாசருக்கு எத்தகைய குறையும் ஏற்படாவாறு அரசப்பர் அவ்வப்போது ஆவன செய்துவந்தார்.

ஆனால் சிவப்பிரகாசருக்கோ ஒன்று மட்டும் உள்ளத்தை உறுத்தி வந்தது. அதுதான் அரசப்பரின் மைந்தன் சண்முகம் கல்வியறிவு பெறாமல் காலங்கடத்தி வரும் கருத்தற்ற நிலை. தன்னை அன்புடன் அழைத்துத் திண்ணை மடத்தில் அமர்த்தி, அறச்செயல் புரிய ஆக்கங் கொடுத்து வரும் அரசப்பரின் புதல்வன் அறிவிலியாய் அலைவதா ? என்றெண்ணிக் கவலை கொண்டார் அவர். ஒரு நாள் அரசப்பரை அழைத்து "துள்ளித் திரிகின்ற காலத்திலே மைந்தனின் துடுக்கை அடக்கிப் பள்ளிக்கு வைக்காத" தந்தையின் குறையை எடுத்துக்காட்டி அறிவுரை கூறினார். அவ்வுரை கேட்டுத் தெரிந்தார் அரசப்பர். தமது அறியாமையை எண்ணி எண்ணி வருந்தினார். காலங்கடத்தாமல் வீட்டையடைந்தார். தம் புதல்வனை அழைத்துக்கொண்டு சிவப்பிரகாசரிடம் சென்று வணங்கி "இனி இவனுக்குக் கல்வி யறிவூட்டிக் கடைத்தேற்றும் பொறுப்பைத் தாங்கள்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்" என மனம் விட்டு மன்றாடினார். சிவப்பிரகாசரும் சிந்தை நிறைவோடு சண்முகனாரை மாணவராக ஏற்றுக்கொண்டு அன்றுமுதல் குருகுல முறையில் கற்பிக்கத் தொடங்கினார்.

**புலமையடைதல் :**

முதலில் சிற்றிலக்கிய இலக்கணங்களையும் பின்னர் பேரிலக்கிய இலக்கணங்களையும் சிவப்பிரகாசர் முறை யாகக் கற்பித்தார். ஆசிரியர் அன்பு கலந்தூட்டும் அருந் தமிழ்ச் சுவையுணவு மாணவரின் செவி வழியே சென்று

சிந்தையில் நிறைந்து அறிவை வளர்த்தது. தோண்டத் தோண்ட நீர் ஊறும் மணற்கேணி போல சண்முகனார் கற்கக் கற்க அவருக்கு நூலறிவு சுரந்தது. இலக்கிய இலக்கண நூல்களைப் பயின்றதுடன் நில்லாமல் சமய நூல்கள் சோதிட நூல்களையும் சிவப்பிரகாசரிடம் பாடம் கேட்கலாயினர். இங்ஙனம் தொடர்ந்து நான்காண்டுகள் நல்ல முறையிற் பயின்றதன் பலனுகச் சண்முகனார் தமது பதினூம் வயதிலேயே புலவர் எனப் புகழ் எய்திப் பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றூர். அவ்விளம்பருவத்திலேயே சிறந்த கவிதைகள் புனையவும் அவர் கற்றுக் கொண்டார். தலைமாணவர்க்குரிய தகைமைகள் யாவும் பூண்டு விளங்கிய சண்முகனாரிடம் ஆசிரியர் சிவப்பிரகாசருக்கு அளவற்ற அன்பு வளர்ந்து வந்தது.

செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கிய நம் சண்முகனூர் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முப்பது எழுத்துக்களையும் முதன்மையாக வைத்துக் கொச்சகக் கவிகள் எழுதினூர். எழுதிய கவிகளில் பிழை எதுவும் உண்டா? என அறிய, தம் ஆசிரியரிடம் கொண்டு போய்க் காட்டினூர். கவிகளைக் கண்ட கணக்காயர் மாணவரின் மதிவன்மையை அறிந்து வியந்தார்." கவிதைகள் மிகவும் நன்ருக உள்ளன பயிற்சியை மேன் மேலும் வளர்த்துவருக! எனப் பாராட்டிச் சண்முகனூரை ஊக்கியனுப்பினூர். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலக அளவு" என்று கருதிய சண்முகனூர் நாள்தோறும் ஆசியர் கூறும் பாடங்களை அவ்வப்பொழுதே சிந்தித்துக் கருத்தில் இருந்தும் கடமையில் தவருதவரானூர்.

அங்ஙனம் பயிலுங் காலத்திலேயே "தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும் "திருக்குறள்" போன்ற இலக்கியங்களும் அவருடைய ஆராய்ச்சி அறிவிற்குத் தூண்டுகோல்களாக இருந்தன.

**தந்தையின் பிரிவு :**

சண்முகனாருக்குப் பதினாறு வயது நிறைந்தது. 17-ம் ஆண்டு தொடங்கியது அவருடைய தந்தை அரசப்பர் நோய்வாய்ப்பட்டு வருந்திச் சில நாளில் சிவபதி எய்தினர். 'அந்தோ! தந்தை பிரிவு தனயனுக்கு ஆற்றொணாத்துயரை அளித்தது. சண்முகனார் முதன் மகனாதலின் குடும்பப் பொறுப்பு முழுவதும் அவரையே சார்ந்தது. என்செய்வார் இளைஞர்! உலகியலில் உழலாதவர், வருத்தம் தெரியாமல் வாழ்ந்தவர், வறுமையை அறியாதவர், இருந்த செல்வத்தைக் கொண்டு சில ஆண்டுகள் எவ்வாறோ குடும்பத்தை நடத்தி வந்தார். ஆனால் அச் செல்வத்தை வைத்து எத்தனை நாள் வாழமுடியும்? அது நாளடைவில் செலவு செய்யச்செய்யக் குறைந்தே வந்தது. சண்முகனாருக்கு மென்மேலும் வாழ்க்கைச் செலவிற்கு வேண்டிய வருவாயைப் பெருக்க வழிதெரியவில்லை. அதைப்பற்றி நினைக்கவுமில்லை. அவர் தம் உள்ளமெல்லாம் அறிவைப் பெருக்குவதிலேயே ஆர்வங்கொண்டது.

"இருவே(று) உலகத்(து) இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்ற பொய்யா மொழியின் உண்மையை உணர்ந்தவரல்லரா அவர்! ஆதலின் அவர் "இருந்தமிழே உன்னால்

இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' எனப் புலவர் ஒருவர் கூறியதை நினைவிற் கொண்டு தம் தாய்மொழியாம் தமிழுக்காகவே வாழ வேண்டுமென எண்ணினார்.

**கவி நூல் இயற்றல் :**

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் அவர் பதினெட்டு வயதை அடைந்தார். முன்போல் சிவப்பிரகாசரிடம் நிலையாயிருந்து நூல்களைப் பயில அவருக்கு வசதியில்லை. வீட்டு அலுவல் முடிந்த எஞ்சிய வேளைகளில் சிவப் பிரகாசரிடம் சென்று தமக்கு அவ்வப்போது தோன்றும் ஐயங்களைக் கேட்டுணர்ந்து தெளிந்துவந்தார். கிடைக்கும் ஓய்வு நேரங்களைக் கவிதைகள் புனைவதிலும் செலவிட்டார். அவ்வகையில் "மாலைமாற்றுமாலை" என்னும் கவிநூல் ஒன்றை வரைந்து ஆசிரியர் சிவப்பிரகாசரிடம் சென்று காட்டினார். கவிதைகள் அனைத்தையும் படித்துச் சுவைத்த ஆசிரியர் களிப்பு மிக அடைந்தார். அந்நூலில் இரண்டாங் கவியில் அமைந்த தொடர் ஒன்று அவருள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அத்தொடர் "வேறலம்" என்பதாகும். ஆசிரியர் நம் சண்முகனாரை அன்புற நோக்கி "வேறலம் என்ற தொடருக்குப் பொருள் யாதோ?" என வினவினார். சண்முகனார் தயக்கமில்லாமல் "ஐயா! யாம் நின்னடிமை யல்லது வேறு அல்லோம்" என்பதே அத்தொடரின் பொருளாகும்" என விடை பகர்ந்தார். பின்னர் அத்தொடர் (வேறு + அல்லம்) "வேறலம்" எனப் புணர்ந்து நின்றதற்குரிய இலக்கணச் சூத்திர விதிகளையும் எடுத்துக் கூறினார். அப்பொழுது

தான் சிவப்பிரகாசர் தாம் எண்ணியதை எய்திவிட்டதாகக் கருதி இறும்பூது உற்ருர். சண்முகனுரை அருள்கனிய நோக்கி "ஐய ! நீ தமிழ்த்தாயின் தவப் புதல்வனுய் விளங்குவாய் ! இணையில்லாப் புலவனுய் இலங்குவாய்!" என வாழ்த்தி விடை நல்கினர்.

**நூல் பயிற்சி :**

வீடு திரும்பிய சண்முகனுர் வீண் காலம் கழிக்க வில்லை. நூல்களுடன் பழகுவதையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டார். "கைகளுக்கணிகலம் கருத்துடை நூல்கள்" என்றபடி பத்துபாட்டு, எட்டுத் தொகை போன்ற சங்க நூல்களையும் "திருக்குறள் போன்ற நீதி நூல்களையும்" 'சிலப்பதிகாரம்' போன்ற பெருங்காப்பியங்களையும் தொல்காப்பியம் போன்ற இலக் கணங்களையும் எந்நேரமும் கையில் எடுத்துவைத்துப் படித்தவண்ணமாகவே இருந்தார். அவற்றிற்கானும் உரைகளையும் நயங்களையும் ஆராய்ந்தார். அப்பயிற்சி பண்புடையார் தொடர்புபோல அவருக்குப் பலனளித்து வந்தது. இங்ஙனம் அவர் நாவின் கிழத்தியாகிய கலைச் செல்வியை நாள்தோறும் நாடி நின்றதால் பூவின் கிழத்தி யாகிய பொருட்செல்வி அவரைவிட்டுப் புலந்து அகன் றனள். புலவராகிய அவரிடம் வறுமை புகுந்தது. வறுமை யிலும் செம்மையாக வாழ்ந்தவர் நம் சண்முகனுர். அந்த வறுமையே அவர் தம் புலமைக்குத் தாயாக இருந்திருக் கிறது. இவ்வாறு சில ஆண்டுகள் சென்றன. அவர் தம் வாழ்க்கைக்கு வேண்டும் வருவாய்க்கு ஒரு வழியும் வகுத்துக் கொண்டிருந்தது நற்காலம்.

# தமிழாசிரியர்பணி

**மதுரைச் சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் :**

1890 ஆம் ஆண்டு மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் வேலை ஒன்று காலி ஏற்பட்டது. அதற்குத் தக்க தமிழ்ப் புலவர் ஒருவரைத் தமிழாசிரியராய் அமர்த்தவேண்டுமென அப்பள்ளி முதல்வர் கருதினார். அங்கிலையில் அவரிடம் சிலர் வந்து சோழவந்தான் புலவர் சண்முகனாரின் அறிவாற்றலைக் குறித்துப் புகழ்ந்து கூறினர். உடனே பள்ளியின் முதல்வர் சண்முகனாரைக் கையுடன் அழைத்து வருமாறு சோழவந்தானுக்குத் தம் நண்பர் ஒருவரை அனுப்பினார். சென்ற நண்பர் சண்முகனாருடன் திரும்பிவந்தார். பள்ளி முதல்வர் சண்முகனாரை அன்புடன் வரவேற்று "தாங்கள் இப் பள்ளியின் தமிழாசிரியர் வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். சிந்தித்தார் நம் புலவர், பல மாணவர்களை ஒருங்கே வைத்துப் பாடஞ் சொல்லித் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றக் கிடைக்கும் வாய்ப்பை நழுவவிட அவருக்கு மனம் வர வில்லை! ,தமிழ்த்தாயே தனக்கிட்ட கட்டளை இதுவாகும் என எண்ணித் தமது உடன்பாட்டைப் பள்ளி முதல் வருக்குத் தெரிவித்தார். அன்று முதல் அவர் சேதுபதி உயர் நிலைப்பள்ளியின் தமிழாசிரியர். ஓர் புரவலர் பெய ரால் நடைபெறும் அப்பள்ளிக்குச் சிறந்த தமிழ்ப் புலவர் ஒருவர் தமிழாசிரியராய் வாய்த்தது மிகவும் பொருத்த மல்லவா? அப்பொழுது அவருக்கு வயது இருபத் தொன்றுதான்!

**கற்பிக்குந்திறன்.**

அவர் நாள்தோறும் காலந்தவறுமற் பள்ளிக்குச் சென்று தம் கடமைகளை நிறைவேற்றுவார். ஒரு நல்லாசிரியருக்குள்ள பண்புகள் யாவும் ஒருங்கே பெற்ற அவர் மாணவர்களை மகிழ்வித்துப் பாடஞ்சொல்லி வரலாயினர். அங்ஙனம் பாடம் சொல்லுங்கால் விரையாமல் வெகுளாமல் விரும்பி முகமலர்ந்து மாணவர் உள்ளம் கொள்ளும்வகை அறிந்து உரைப்பார். இலக்கணங்களை எளிதாய் விளக்குவார். இலக்கியச் சுவைகளை எடுத்து மொழிவார். பாடல் ஒன்றுக்குப் பல பொருள் கூறுவார். மற்றவர் உறைகளை மறுத்துச் சொல்லிச்சொந்த உரைகளைச் சுவையுடன் காட்டுவார். பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டிப் பாடலின் கருத்தைப் பதியவைப்பார். இங்ஙனமெல்லாம் இனிதாய்ப் பாடஞ் சொல்லும் அவர்தம் திறமறிந்து மாணவரும் மற்றவரும் பாராட்டிப் பேசினர். அக்காலத்தில் அவரிடம் பயின்று வெளிவந்த மாணவர்களிற் பலர் பிற்காலத்தே பேரறிஞர்களாகத் திகழ்ந்தனர். பள்ளியிலேயன்றித் தனித்த முறையிலும் அவரிடம் பாடங் கேட்டுப் பண்டிதரானோர் பலர். காலஞ்சென்ற புலவர் சோழவந்தான் கந்தசாமியார் அவர்களும் தற்காலத் தமிழ்ப் பெரும் புலவராயிலங்கிய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவராவர்.

**வயிற்று நோய் :-**

நம் சண்முகனார் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்து பன்னிரண்டாண்டுகள் தமிழாசிரியராய்ப்

பணியாற்றி வந்தார். அக்காலத்திற் கிடைத்த ஓய்வு நேரங்களை அவர் ஒரு சிறிதும் வீணாக்கவில்லை. தமிழ் நூல்களை ஆராய்வதிலும் புதிய உரைகள் காண்பதிலும் கவிதைகள் யாப்பதிலும் தாம் எழுதிய நூல்களைப் பதிப்ப திலும் வெளியிடங்களிற் சென்று சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் பொழுதைப் பயன்படுத்தி வந்தார். இவ்வாறு தன்னலமறந்து தமிழ்ப்பணி செய்துவந்த சண்முகனார் ஒரு கொடிய நோய்க்கு ஆளாக நேர்ந்தது. அவருடைய அடிவயிற்றில் வெப்பத்தின் மிகுதியால் ஓர் கட்டி புறப்பட்டது. அக் கட்டி அவரை எளிதாக மலமும் சிறுநீரும் கழிக்க விடாமல் வேதனை விளைத்தது. உள்ளூர் மருத்துவர் பலரிடம் காட்டி மருந்துண்டு பார்த் தார். நோய் தணிந்தபாடில்லை. வலியால் மேன்மேலும் வருந்தினார். விரைவில் நோய் நீங்கப்பெற வேண்டுமெனத் துடித்தார், தமது உடல் நிலையை அந்நாளில் தமிழ்ப் பெரும் புலவராக விளங்கிய பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவருக்கு அறிவித்து அவருடைய உதவியைக் கோரினார்.

பாவலரின் நிலையுணர்ந்த பாண்டித்துரையவர்கள் புலவர் மருத்துவம் பார்த்துவர ஓராண்டுகாலம் ஊதியத் துடன் விடுமுறை கொடுக்குமாறு பள்ளி முதல்வருக்கு ஆணையிட்டார். அத்துடன் முதலில் மருந்து செலவிற் கெனச் சொந்தமாக நூறு வெண்பொற் காசுகளையும் புலவருக்கு கொடுத்துதவினார். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பது பொய்யாமோ!

பாண்டித்துரைத் தேவரின் உதவி பெற்ற நம் புலவர் உடனே புறப்பட்டுப் புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள "கலங்குடி" என்னும் ஊரை அடைந்தார். அவ்வூரில் சிறந்த மருத்துவர் எனப் பேர்பெற்றவர் வேணுகோபால் நாயுடு என்னும் மருத்துவர். நம் புலவர் அவரைக் கண்டு தமது நோயை விரைவிற் குணப்படுத்து மாறு வேண்டிக்கொண்டார். அவ்வாறே அந் நோயின் தன்மையையாராய்ந்து பார்த்த மருத்துவர் "இது அறுவை மருத்துவத்தால் தான் அகலும்" எனக்கூறி அந்நாளில் தஞ்சையில் அறுவை வைத்திய முறையில் சிறந்து விளங்கிய எஸ். எம். ஹக்கீம் I. M. S. அவர்களிடம் விரைந்து செல்லுமாறு அனுப்பி வைத்தார். புலவரின் வழிச் செலவிற்கென ஐம்பது வெண்பொற் காசுகளையும் நாயுடு அவர்கள் நல்கினர். அம் மருத்துவப் பெரியாரின் தமிழன்புதான் என்னே!

தஞ்சையை அடைந்த புலவர் சண்முகனர் கணமும் தாழாது அறுவை மருத்துவ வல்லுநரான ஹக்கீம் அவர்களைக் கண்டார். தமது நோயின் கொடுமையை விளக்கிக் கூறினர், அவ்வல்லுநரும் புலவரின் நோய் நாடி, நோயின் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி இறுதியில் அறுவை மருத்துவத்தால் கட்டியைக் களைந்து நோயை அகற்றினர். நோய் நீங்கப்பெற்ற நம் புலவருக்குப் புதுப்பிறவி எடுத்தது போலிருந்தது. அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை. மருத்துவர் செய்த மாபெரும் நன்றியை அவரால் மறக்க முடியுமோ? அவர் பால் தமக்குள்ள நன்றியை உலகம் என்றும் மறவா

திருக்கத் தாம் பதிப்பித்த தொல்காப்பியப் பாயிர விருத்தி யில் "இப்பொழுதுள்ள இந்த உடலைத் தந்த தந்தையும் தாயுமானுர்" என வரைந்து தெரிவித்துள்ளார். புலவர் சண்முகனுர் தமதுடல் நலமடைந்தவுடன் மீண்டும் சேதுபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் பணியை மேற் கொண்டார். ஆயினும் அப் பணி சில ஆண்டுகளே நிலைத்தது. ஆங்கு நிகழ்ந்த அவருக்குப் பிடித்தமில்லாத நிகழ்ச்சி என்று அவரை வேலையை விட்டு விலகுமாறு செய்தது.

**வேலையை விட்டமை :**

பள்ளியின் முதல்வர் பாடங்களுக்குக் குறிப்பிட்ட கால அட்டவணையில் ஆங்கிலத்தைவிடத் தமிழுக்குக் குறைந்த நேரமே கொடுத்திருந்தார். இதைக்கண்ட சண்முகனுருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. விரைந்து பள்ளி முதல்வரிடஞ் சென்ருர். ஆங்கிலத்தினும் தமிழுக்குக் குறைந்த நேரம் கொடுத்துள்ளதைக் குறித்துக் காட்டித் தாய்மொழிக்கு நேரத்தை மிகுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். ஆனுல் அப்போது அவர் முயற்சி பலிக்கவில்லை. முதல்வர் நேரத்தைக் கூடுதலாக்க மறுத்த துடன் "அது தமிழ்தானே" எனச் சற்று இளப்பமாகவும் கூறினுர். முதல்வரின் அந்தச் சொல் செவியில் பட்டதும் கடுஞ்சினங் கொண்டார் சண்முகனுர்.

"தமிழை இழிவு செய்வாரை......எனதருமைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கவிஞர் ஒருவர் கூறியதற் கேற்ப, "தமிழின் அருமையையும், பெருமையையும்

அறியாத இவ்விடத்தில் எனக்கென்ன வேலை?'' எனக்கூறி அக்கணமே அவ் வேலையை விட்டு விலகினார். சண்முகனாரின் தணியாத தாய்மொழிப் பற்றிற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

# தமிழ்ச் சங்கப் புலவர்.

**நான்காம் சங்கத் தோற்றம் :**

மதுரையிலே 1901ஆம் ஆண்டு சென்னை மாநில அரசியல் மாநாடு ஒன்று கூடிற்று. அம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பாண்டித்துரைத் தேவர் அமைந்தார். மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த அம்மாநாட்டில் பல அரசியல் தீர்மானங்கள் நிறைவேறின. இறுதியில் பாண்டித்துரையவர்கள் பேசவேண்டிய சமயம் நேரிட்டது. அப்பேச்சின் முடிவில் மதுரைமா நகரிலே ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவவேண்டிய முக்கியத்தை வலியுறுத்தி அதை ஓர் தீர்மானமாகவும் கொண்டுவந்து நிறைவேற்றினர். அவரால் அத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதற்கு ஓர் காரணமும் உண்டு. முன்பு ஒரு சமயம் பாண்டித்துரைத் தேவர் மதுரைக்கு வந்திருந்தார். அப்பொழுது அவரை இலக்கியச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்துமாறு தமிழன்பர் பலர் வேண்டினர். அவரும் அதற்கிணங்கினர். சொற்பொழிவிற்கு ஆயத்தம் செய்யத் "திருக்குறள்" "கம்பராமாணம்" என்ற இரு நூல்களையும் வாங்கி வருமாறு சில நண்பர்களுக்கு ஆள் விடுத்தார். அந்நூல்கள் எவரிடமிருந்தும் சமயத்தில் அவருக்குக் கிடைக்கவில்லை; முடிவில் புதுமண்டபம் புத்தகக்கடையிலிருந்தே அவை விலை கொடுத்து வாங்கப்பட்டன. அப்பொழுதுதான் ஒரு காலத்தில் சங்கமிருந்து தமிழாராய்ந்து வீறுபெற்று விளங்கிய மதுரை, தாய்மொழியை மறந்து தாழ்நிலையடைந்துள்ளதைத் தேவர் நன்கு

உணர்ந்தார். தமிழர் தமிழை மறந்து வாழ்வதா? என அவர் மனம் வருந்தியது. அப்பொழுது அவர் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவித் தாய்மொழியைப் பரப்பவேண்டும் என்று கொண்ட உறுதிப்பாடுதான் அரசியல் மாநாட்டில் இறுதித் தீர்மானமாக நிறைவேறியது.

**புலவருள் அரசர் :**

பாண்டித்துரைத் தேவரவர்களின் பெருமுயற்சியால் மாநாடு முடிந்த நான்கு திங்களுக்குப் பின்னர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. அச் சங்க விழா வில் தமிழ் நாட்டின் தலைசிறந்த புலவர்களான ஆசிரியர் மறைமலையடிகள், சோழவந்தான் புலவர் சண்முகனார், திருமயிலை சண்முகம் பிள்ளை, உ. வே, சாமிநாதய்யர், ரா. இராகவய்யங்கார், பரிதிமாற்கலைஞர் ஆகியோரின் செவிக்கும்சிந்தைக்குமினிய சொற்பொழிவுகள்நிகழ்ந்தன. சங்கப் பேரவையில் புலவர் சண்முகனார் பேச எழுந்த போது உழவனைப்போன்ற அவரின் எளிய தோற்றத்தைக் கண்டு சிலர் நகைக்கவும் செய்தனர். ஆனால் அவர் பேசத் தொடங்கியதும் அவையில் அமைதி நிலவியது. புலவர் களுள் தெளிவில்லாமல் பூசலிட்டுக் கொள்ளும்படி சிக்க லுற்றுக்கிடக்கும் சில இலக்கணக் குறிப்புக்களை அவர் விளக்கியபோது வியக்கத்தக்க இப்புலவர், 'தொல்காப்பி யரின் வழித்தோன்றலோ! என்று வாய்விட்டுப் பாராட் டினர். சண்முகனாரின் அறிவாராய்ச்சி மிக்க அச் சொற் பொழிவு அருகில் அமர்ந்து கேட்ட பாண்டித்துரைத்

தேவரின் உள்ளத்தை கொள்ளைகொண்டது. அதுமுதல் தேவருக்குப் புலவர் சண்முகனார்பால் தனித்ததோர் பற்று தலும் தழைத்துவரலாயிற்று. ஆங்கிருந்த புலவர்களுக் கெல்லாம் சண்முகனாரே அரசராகக் காணப்பட்டார். ஆதலின் அறிஞர் கூட்டம் அவரை அரசஞ்சண்முகனார் என அழைக்கலாயிற்று.

ஆனால் சண்முகனாருக்கு 'அரசன்' என்னும் அடை மொழி வேறு வகையாக வந்தது என்பர். "சண்முகனார் காலத்திலேயே சென்னையைச் சார்ந்த திருமயிலையில் சண்முகம் பிள்ளை என்று பெயர் வாய்ந்த புலவர் ஒருவரும் இருந்தார். அவருக்கும் தமக்கும் வேறுபாடு தெரிவதற்காக நம் சண்முகனார் தமது பெயருக்கு முன்னர் தம்தந்தையின் பெயரை அமைத்து "அரசன் சண்முகனார்" என வைத்துக் கொண்டார்." எவ்வாறமையினும் சண்முகனாருக்கு அமைந்த அந்த "அரசன்" என்னும் அடைமொழிச் சிறப்பு மிகவும் பொருத்தமுடையதல்லவா ?

பாண்டித்துரைத் தேவரால் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தை யொட்டிச் சேதுபதி செந்தமிழ்க் கல்லூரி ஒன்றும் திறக்கப்பட்டது. அக் கல்லூரி சிறந்த தமிழ்ப் புலவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டது. அதற்குத் தக்க புலமையாளர் ஒருவர் ஆசிரியராகத் தேவைப் பட்டார். பாண்டித்துரைத் தேவர் நம் அரசஞ் சண்முகனாரின் அறிவாற்றலை ஏற்கனவே நேரில் அறிந்தவ ராதலின் அவரை அழைத்து அக் கல்லூரி ஆசிரியர் பணியை ஏற்குமாறு வேண்டினார். தேவரின் விருப்பப்

படியே சண்முகனார் சங்கப்புலவரானார். தமிழ் மாண வர்க்குப் பாடஞ்சொல்வதோடு சங்கத்தின் திங்கள் வெளியீடாக வந்துகொண்டிருந்த "செந்தமிழ்" இதழிலும் "ஞானசாகரம்" "விவேகபானு" "தமிழகம்" போன்ற வெளியீடுகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்து அவ்வப்போது வெளியிடலாயினர். அதனால் நம் புலவரின் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று சண்முகனார் இங்ஙனம் நான்கு ஆண்டுகள் சங்கப் பணி புரிந்தனர்.

**கவிதை ஆற்றல் :**

ஆண்டிற்கொருமுறை மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா நடைபெறுவது வழக்கம். அதையொட்டி ஓராண்டில் விழா நடைபெற்றது. வெளியூரிலிருந்தும் புலவர்கள் வந்து விழாவிற் கலந்துகொண்டனர். சிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள் அனைவருக்கும் செவி விருந்தாயமைந்தன. முற்பகல் நிகழ்ச்சி முடிந்ததும் புலவர்கள் பகலுணவுகொள்ளப் பந்திக்குச் சென்றனர். அரசஞ்சண்முகனார் பந்தியின் கோடியில் அடக்கமாய் அமர்ந்திருந்தார். இலைகளில் காய்கறி வகைகள் பரிமாறப் பட்டிருந்தன. சோறு வரும்வரை அனைவரும் சும்மா இருக்கவேண்டியதாயிற்று. அமைதி நிலவிய அப்பொழுது புலவர் ஒருவர் "ஆளுக்கொரு வெண்பாப் பாடலாமே!" என்று யாவருக்கும் கேட்கும்படி ஒரு குரல் கொடுத்தார். ஆம்! ஆம்! அதற்கு அரசஞ்சண்முகனார்தான் ஈற்றடி கொடுக்கவேண்டும் என ஒரு திருத்தங் கொண்டுவந்து

தம் உடன்பாட்டைத் தெரிவித்தார் மற்ருெரு புலவர். எல்லோரும் "அதுதான் சரி" என ஆரவாரித்தனர்.

அப்பொழுது இலைக்கு உணவு பரிமாற ஒருவர் வந்தார். அவர்பெயர் இராமநுஜம் என்பது. நம் சண்முகனருக்கு முன்னரே அறிமுகமானவர் அவர். அவரும் ஒரு புலவர்தான். அவரைக்கண்டதும் சண்முகனர்.

"சம் ராமாநுஜம்" என்ற தொடரைப் பெருமிதத்தோடு கூறினர். இதுதான் அவர் கொடுத்த வெண்பாவின் ஈற்றடி. இவ்வடி புலமையிற் குன்றிய சிலருக்கு மண்டையிடி உண்டாக்கியது. வெண்பாவிற்கு வேண்டிய பிற மூன்றடிகளையும் ஏனைய புலவர்கள் பாடவேண்டும். அதுவும் அப்பந்தியில் பரிமாறப்படும் உணவுப் பொருள்களின் பெயர்களை அமைத்தே பாடவேண்டும். அதிலும் பரிமாறும் 'இராமாநுஜம்' பக்கத்தில் வரும்போது பாட்டைத் தொடங்கவேண்டும்! என்பது ஒப்பந்தம். இதன்படி பந்தியின் முதலில் அமர்ந்திருந்தவர் பாடலைத் தொடங்கவேண்டியவரானர். ஆங்குள்ள உணவுப் பொருள்களின் பெயர்களுள் ஏதேனும் ஒன்றை வைத்துத் தானே பாடவேண்டும்? அவர் சிந்தனை கவியை உருவாக்கிக்கொண்டிருந்தது. பரிமாறும் இராமாநுஜரும் பக்கத்தில் வந்து விட்டார். முதல்வர் தொடங்கினர்.

"—................................................ ர
சம் ராமாநுஜம்" என ரசத்தை இராமாநுஜத்தோடு பொருத்தினர். அவர் விரும்பியது ரசம் போலும்! அந்த

ரசம் கவிதையையும் ரசப்படுத்தி விட்டது. அடுத்து இரண்டாம் பாவலரின் இலைக்கு இராமாநுஜர் சென்றார். அவரோ

"...................................................... பாய
சம் இராமாநுஜம் என்றார். பாயாசம் மிகவும் சுவையானதல்லவா? அது நறுமணமுந் தோய்ந்ததாயிற்றே! அந்த நறுமணத்தை அவர் கவியிலும் கமழச் செய்தார். அவரையடுத்திருந்த பாவலரும் ஆயத்தமானார் பாடுதற்கு. இராமாநுஜர் பக்கத்தில் வந்ததும்.

"...................................................... அதிர
சம் ராமாநுஜம்" எனப்பாடி ஆர்வத்துடன் அதிரசத்தைக் கேட்கத் தொடங்கினார். இவ்வாறே ஒவ்வொருவரும் வெண்பாவைப் பாடினர். இனிப்பாட வேண்டியவர் சண்முகனார் ஒருவர்தாம்! அவர் பாடுவதற்குப் பொருத்தமான உணவுப்பொருளின் பெயருக்கு என்ன செய்வார்? எவ்விதம் பாடுவார்? பார்க்கலாமெனப் புலவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இராமாநுஜரும் பரிமாற வந்துவிட்டனர், சண்முகனார் சற்றும் தயங்காமல்

"...................................................... இனுங் கொஞ்
சம் ராமாநுஜம் என்று கவியைப் பாடி முடித்தார். "கையின் கண்ணுள்ள அந்த உணவுப் பொருளிலேயே இன்னும் கொஞ்சம் இலையில் போடு" என்னும் பொருளில் அவ்வடியை அமைத்தார் புலவர். ஆங்கிருந்தோரனை

வரும் சண்முகனாரின் கவியாற்றலைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்தனர். இங்ஙனம் ஆற்றலுடன் விளங்கிய அவர் வரைந்த கவிநூல்கள் பலப்பல. சில அச்சேறியும் சில அச்சேறுமலும் இருக்கின்றன. அவரியற்றிய தனிப் பாடல்களும் பலவாம்.

★

## நூலாசிரியர்.

**புத்துரை காணல்**

தமிழ்த்தாயின் கண்கள் என மிளிரும் நூல்கள் இரண்டு. ஒன்று தொல்காப்பியம். மற்றொன்று திருக்குறள். தொல்காப்பியம் தொல்காப்பியர் என்பவரால் இயற்றப்பட்டது. அது தற்போதுள்ள இலக்கண நூல்களுக்குத் தலைமை தாங்குவது. திருக்குறள் இலக்கியங்களுள் இணையற்றது. இவ்விரு நூல்களையும் எழுத்தெண்ணி ஆய்ந்தவர் சண்முகனார். தொல்காப்பியத்தின் உரைகளைத் துருவியாய்ந்து பயிலுங் காலங்களில் சண்முகனார் சிற்சில இடங்களில் பொருந்தா உரைகளைக் காணலாயினர். அத்தகைய இடங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவ்வுரைகள் பொருந்தாமையை எடுத்துக் காட்டி மறுப்புரை வரைந்து தமது புதிய உரையையும் பொருந்துமாறு விளக்கினார். அவற்றை வெளியீடுகளின் வாயிலாகவும் பரப்பினார். இங்ஙனம் புலமையுயர்வுடன் விளங்கிய சண்முகனாரைக் கண்டு சில புலவர்கள் பொறாமை கொண்டனர். "பழந்தமிழ் உரையாசிரியரை மறுக்கும் பரந்த அறிவுடையரோ இவர்?" எனப் பல வகையில் தமது கண்டனங்களை எழுப்பினர். அப்புலவர்களின் சலசலப்பிற்குச் சண்முகனார் அஞ்சவில்லை. "புலவர்களின் புலம்பலுக்கு வாயாப்பும் நுணங்குமொழிப் புலவருக்கு வணங்குமொழி விண்ணப்பமும்" என்ற தலைப்பில் தம்மை எதிர்த்த புலவருக்குத் தக்க விளக்கங் காட்டி வரைந்து அவர்தம் வாயை அடக்கினார்.

**தொல்காப்பிய விருத்தி :**

தொல்காப்பியத்துள் பாயிரம் என்பது நூலின் முதற்கண் அமைந்தது. அது முன்னுரையைப் போன்று செய்யுளால் பாடப்பட்டது. அதைப் பாடியவர் "பனம்பாரனுர்" என்னும் புலவர், தொல்காப்பியம் முழுமைக்கும் விருத்தியுரை ஒன்று வரைதல் வேண்டுமென்பது சண்முகனுரின் ஆவல். அதன் காரணமாக முதலில் உள்ள பாயிரத்திற்கு விருத்தியுரை யொன்று வரைந்தார். அதற்குச் "சண்முக விருத்தி" எனப் பெயரிட்டார். அதைத் தொடர்ந்து "நூன்மரபு விருத்தி" என்ற நூலும் அவரால் வெளியிடப்பட்டது. இந் நூல்களை அவருடைய நண்பர் அரித்துவாரமங்கலம் இரகுநாதராசாளியார் என்பவரின் பேருதவியால் அச்சியற்றி வெளியிட்டார்.

**திருக்குறள் விருத்தி :**

இங்ஙனமே "தமிழ்மறை" யென போற்றப்படும் "திருக்குறளையும்" சண்முகனுர் நன்கு ஆராய்ந்தார். சில குறளின்கண் உள்ள சில சொற்களைத் திருத்தினுர். சில இடங்களில் அதிகாரவைப்புமுறை இவ்வாறிருக்கவேண்டு மெனவும் சில குறட்பாக்களின் கருத்து இதுவெனவும் விளக்கிக்காட்டிப் புதிய உரையும் வரைந்தார். அதற்குத் "திருக்குறட் சண்முகவிருத்தி" எனப் பெயர் சூட்டப் பட்டது. இவ்வாறு ஒரு சிறந்த நூலை இங்ஙனம் ஆராய்தல் வேண்டுமென்பதைத் தமது அறிவாற்றலால் ஆராய்ந்து காட்டியவர் சண்முகனுர்தாம், தொல்காப்பியப் பாயிர விருத்தியும் திருக்குறட் சண்முகவிருத்தியும் இதற்குச் சான்ருக நிற்கின்றன.

**வேறு நூல்கள் :**

இங்ஙனம் ஆராய்ச்சி நூல்களோடு பல கவிதை நூல்களும் இவரால் வெளியிடப்பட்டன. அவை சொல்லணி பொருளணிகள் நிறைந்து சுவைபயக்கும் நூல்களாம். அவற்றுள் அச்சேறிய நூல்கள் மாலைமாற்று மாலை, இன்னிசை இருநூறு, மதுரை மீனுட்சியம்மை சந்தத்திருவடி மாலை, திருவடிப்பத்து, சிதம்பர விநாயகர் மாலை, திருவள்ளுவர்நேரிசை என்பன, இன்னும் அச்சி யற்றப்பெறுதவை ஏகபாதநூற்றந்தாதி, முருகக்கடவுள் கலம்பகம், பஞ்சதந்திர வெண்பா, மதுரைச் சிலேடை, நவமணிக்காரிகை நிகண்டு, நுண்பொருட்கோவை, இசை நுணுக்கச் சிற்றுரை, ஆகுபெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சி என்னும் நூல்களாம். இறுதியிலுள்ள இரு நூல்களும் உரை நடையில் இயன்றவை; அச்சேருத இந்நூல்களை அச்சேற்றியுதவுதல் தமிழ்நாட்டின் தலையாய கடமையாகும்.

## ஏழைக்கிரங்கல்.

தமிழ் நாட்டில் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றி வரும் மடங்கள் பலவாம். அவற்றுள் திருவாவடுதுறைமடம் மிகவும் பெரிது. இம் மடத்தின் தலைவர்களாக முன்பிருந்த துறவிகள் அனைவரும் மொழி வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் ஆவன செய்திருக்கின்றனர். புலவர் சண்முகனார் காலத்தில் அம்மடத் தலைவராயிருந்தவர் அம்பலவாண தேசிகர். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்த புலமையாளர். ஒருசமயம் அவர் நம் புலவர் சண்முகனார் வரைந்து வெளியிட்ட "தொல்காப்பியப் பாயிர விருத்தி" யைப் பார்க்க நேர்ந்தது. அதில் நம் சண்முகனார் அம் மடத்தின் தலைவராயிருந்து தன்னேரில்லாத் தமிழ்ப் புலவராய் விளங்கிய சிவஞான முனிவரின் கருத்தை மறுத்து வரைந்திருந்தார். அதைக்கண்ட நாள் முதல் அம்பலவாணருக்குச் சண்முகனாரை நேரில் காணவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அந் நிலையில் திருவாவடுதுறையில் "தமிழ்க்கலை மாநாடு" ஒன்றும் நடைபெற ஏற்பாடு நடந்தது. சண்முகனாருள்படத் தமிழகப் புலவர் பலருக்கும் அழைப்புகள் சென்றன. அம்பலவாணர் நம் சண்முகனாருக்குத் தனிப்பட்ட முறையில் அழைப்புக் கடிதமொன்றும் அனுப்பியிருந்தார். அழைப்புகளைப் பெற்ற புலவர் குறிப்பிட்ட நாளில் மாநாட்டுச் சொற்பொழிவாளருள் ஒருவராகச் சென்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். ஆங்குச் சண்முகனார் சொற்பொழிவு, அவையினரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

மாநாடு முடிந்ததும் அம்பலவாணர் சண்முகனாரைத் தனியே அழைத்து அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது "தொல்காப்பியப் பாயிர விருத்தியில்" சண்முகனார் சிவஞான முனிவரை மறுத்து எழுதியது பற்றிச் சில வினாக்களை அவர் எழுப்பினார். அவர் கேட்ட வினாக்களுக்குத் தக்கவாறு விடை கூறி உடன்படச் செய்தார் புலவர். சண்முகனாரின் புலமை திறனறிந்த தேசிகர் அவரைப் புகழ்ந்து போற்றிப் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார். நூறு வெண்பொற் காசுகளை யும் பரிசாக வழங்கி அனுப்பினார்.

விடைபெற்றுக் கொண்ட புலவர் ஓர் குதிரை வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு புகைவண்டி நிலையம் நோக்கிப் புறப்பட்டார். அவ் வண்டியில் புலவருடன் வேறிருவரும் பயணம் செய்தனர். வண்டி தெருவின் வழியே சென்றுகொண்டிருந்தது. அவ்வழியில் ஓர் ஏழைப் பெண் வந்துகொண்டிருந்தாள். அவள் தன் மானத்தைச் சரிவர மறைக்கக்கூடத் துணியில்லாமல் மிகவும் கிழிந்த கந்தலையுடுத்து நடந்தாள். அவளுடைய வறுமை நிலைகண்டு நம் புலவர் உள்ளம் வாடியது. உடனே வண்டியை நிறுத்தச் செய்தார். ஆடையின்றி அவதியுறும் அந்த ஏழைப் பெண்ணை அருகேயழைத்தார். தாம் போர்த்திருந்த பொன்னாடையை எடுத்து உடுத்துக் கொள்ளச்சொன்னார். கையில் வைத்திருந்த பணத்தில் சிறு தொகையையும் அவளுக்குக் கொடுத்தார். எதிர் பாராத இவர் செயல் அவ்வேழைப் பெண்ணையும் அருகி லிருந்த பிறரையும் பெருவியப்பிற்குள்ளாக்கியது.

மீண்டும் குதிரையை விரைந்து செலுத்துமாறு வண்டிக் காரனுக்குக் கட்டளையிட்டார். வண்டியும் அப் பெண் ணின் கண்களுக்கு எட்டாமல் மறைந்தது. சண்முகனர் புலவர் மட்டுமல்லர். ஓர் புரவலர் என்பதையும் அன்று அவர் செயல் அறிவித்தது. ஏழைக்கிரங்கிய இப் புலவரின் பண்புதான் என்னே! வறுமையிலும் செம்மையாக வன்றோ இவர் வாழ்ந்துள்ளார்! 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும் அல்லவா?

சண்முகனரின் இச்செயல் எவ்வாறோ அம்பலவாண தேசிகருக்கு எட்டியது. 'மடத்தின் மதிப்பான பொன் னுடையைப் போற்றி வைக்காமல் புலவர் நடந்து கொண்டாரே! என அவர் வருந்தினர். அவருடைய வருத்தத்தை அறிந்த புலவர் இரண்டு திங்களுக்குப் பின்னர் மீண்டும் மடத்தை அடைந்தார். புலவரைக் கண்ட தேசிகரும் நல்வரவு கூறி மகிழ்ந்து வரவேற்றார். ஆனல் பொன்னுடையைப் பற்றிய செய்தியை அவர் கேட்க மறந்துவிட்டார். சண்முகனரே வலிய அந் நிகழ்ச்சியைக்கூறி அந்நிலையில் அவ்வேழைப் பெண்ணிற்கு ஆடை வழங்கியதன் இன்றியமையாமையை எடுத்துக் விளக்கினர். புலவரின் பெருந்தகைமையை அறிந்த அம்பலவாணர் மீண்டும் ஒரு பொன்னுடையை வர வழைத்துத் தன் கையாலேயே அவருக்குப் போர்த்து "அன்பின் அளிப்பான இந்த மதிப்புப் பொருளை இனி எவருக்கும் வழங்குதல் கூடாது" என வேண்டிக் கொண்டார். சண்முகனர் ஆங்குச் சில நாட்கள் தங்கி யிருந்து பின்னர் தம்மூர் மீண்டார்.

**சொல்வன்மை :**

மதுரையை யடுத்துக் கிழக்கில் மாரியம்மன் தெப்பக் குளம் ஒன்றுள்ளது. நம் சண்முகனூர் அமைதியை நாடி ஆங்கு அடிக்கடி செல்வது வழக்கம். ஒரு நாள் அக் குளத்திலே இறங்க, படியில் கால் எடுத்து வைத்தார். அப்படியின் பாசம் வழுக்கி விடவே புலவர் குளத்தில் விழுந்துவிட்டார். பக்கத்துணைக்கு யாருமில்லாத அவ் வேளையில் ஒருவர் எங்கிருந்தோ ஓடோடியும் வந்து சண்முகனூரைக் கைகொடுத்துத் தூக்கிக்கரையேற்றினூர். அவர்தான் உத்தமபாளையம் திரு. சுப்பிரமணிய முதலியார் ஆவர். முருகன் தான் முதலியாராக வந்து உயிர் காத்தாரோ! என எண்ணினூர் புலவர், முதலியாருக்குத் தம் நன்றியை அறிவிக்கும் முறையில் "உயிர் காத்த உபகாரி" எனத் தாம் பதித்த நூலொன்றில் அவரைப் புகழ்ந்து பொறிக்கலாயினர். அன்றுதொட்டுப் புலவரும் முதலியாரும் சிறந்த நண்பர்களானூர்கள்.

அவர்களிருவரும் நாள்தோறும் மாலை நேரத்தில் வெளியில் சென்று உலாவி வருவது வழக்கம். ஒரு நாள் அவ்வாறு செல்லுகையில் கதிரவனின் வெம்மை சற்றுக் கடுமையாக இருந்தது. வழிநடந்த முதலியார் புலவரை நோக்கி "பண்டைக்காலப் பாவலர் சிலர் பாடல்கள் பாடிச் செயற்கருஞ் செயல்களைச் செய்துள்ளனரே! அவர்களைப்போலத் தாங்களும் ஒரு கவிபாடி மழையை வருவித்து இந்த வெம்மையைத் தணிக்கலாகாதா?" எனப்

புன்னகை தோன்றக் கேட்டார். முதலியார் விளையாட்டாகக் கேட்டார் என்பதைப் புலவர் அறியார். உடனே "போய் வருமளவும் பொழிவாய் முகிலே" என்னும் ஈற்றடி கொண்ட கவிதையொன்றைப் பாடித் தம் வழிபடுகடவுளாம் முருகனை வேண்டினார். சிறிதுநேரத்திற்கெல்லாம் வானத்தினின்றும் மழைத் துளிகள் விழுந்தன. கதிரவனின் வெம்மை தணிந்தது. இந் நிகழ்ச்சியைக் கண்ட முதலியார் பெரு வியப்படைந்தார். புலவரின் வாக்கு வன்மையையும் பக்திப் பெருக்கையும் பற்றிப் பலரிடம் கூறி மகிழ்ந்தார்.

பிறிதொரு சமயம் நம் சண்முகனார் தஞ்சைக்குச் சென்றிருந்தார். ஆண்டு ஓர் அவைக்களத்தில் அவர் அரிய சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தார். இடையே ஒரு சிறுவன் அடிக்கடி எழுந்து ஆடியும் ஓடியும் பாடியும் திரிந்துகொண்டிருந்தான். அவன் செய்த அக்குறும்பு புலவரின் சொற்பொழிவிற்கு இடையூறாயிருந்தது. சிறிது சினங்கொண்ட அவர் சிறுவனை நோக்கிப் "படுபயலே" என விளித்தார். அக்கணமே அச் சொல் சிறுவனை நடைதடுமாறச் செய்து கீழே வீழ்த்தியது. பையன் படுத்துவிட்டான். அந் நிகழ்ச்சியை யுற்று நோக்கிய அவையினர், அடைந்த வியப்பு அளவிலாதது. அவர்கள் புலவரைப் பார்த்து "அந்தோ! அச் சிறுவனின் அறியாமையால் நேர்ந்த பிழையை மன்னித்துத் தங்களின் நாவன்மையால் மீண்டும் அவனை எழுப்புதல் வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டனர். உடனே புலவர் "பாடும் பயலே" என்றார். பையன் சட்டென

எழுந்து பாடியாடிக்கொண்டு அவ்விடம் விட்டு ஓட லாயினன்.

மற்ருெரு நாளில் அரசஞ்சண்முகனுர் சோழ வந்தானுக்கு அணித்தேயுள்ள ஓர் ஊரில் நடந்த தமிழ்க் கழக ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கச் சென்று கொண்டிருந்தார். அவ்வழியிலே வந்த சாயபு ஒருவர் புல வரின் எளிய தோற்றத்தைக் கண்டு "இவர் ஒரு கூலி யாளோ" என எண்ணினுர். தன்னிடமிருந்த மூட்டை யொன்றைச் சண்முகனுரிடம் கொடுத்துத் தூக்கிக் கொண்டுவருமாறு பணித்தார். புலவர் உடனே மூட்டையை வாங்கிக் கொண்டார். இருவரும் சிறிது தொலைவிற்கு நடந்தனர். குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் சண்முகனுர் சாயபுவிடம் மூட்டையைத் திருப்பிக் கொடுத்தார். "மூட்டையைக் கடைசிவரை யிலும் சுமந்துவந்து கொடுத்துவிட்டுக் கூலி பெற்றுப் போமையா!" என அச்சாயபு சற்றுச் சினத்துடன் கூறி ஞர். கேட்ட புலவருக்குச் சிரிப்பு வந்தது. அதை ஒரு வாறு மறைத்துக்கொண்டு "இல்லையையா! இதோ இவ் வழியே யான் பக்கத்து ஊருக்கு ஒரு காரியமாகச் செல்ல வேண்டும். வருகிறேன்!" என்று சொல்லி விரைந்து புறப்பட்டார். அவ்வமயம் ஆண்டுவிழாக் குழுவினர் புலவர் சண்முகனுரை வரவேற்க அவ்வழியே வந்து கொண்டிருந்தனர். புலவரைக் கண்டதும் அவர்கள் மகிழ்ந்து மாலையிட்டு வரவேற்றனர். அக் காட்சியைக் கண்ட சாயபுக்கோ பேரச்சம் பிறந்தது. ஓடிவந்து சண்முகனுரின் காலில் விழுந்து "பாவா! மன்னிக்க

வேண்டும்'' எனப் பெரிதும் வேண்டிக்கொண்டார். "வருந்தாதீர்! நீர் வேண்டுமென்று செய்தீர்! யான் தானே உதவினேன்!'' என்று சண்முகனுர் அச்சாயபுக்கு ஆறுதல் கூறித் தேற்றி அனுப்பினுர். இங்ஙனம் புலவர் சண்முகனுரின் வாழ்க்கையில் நடந்த வியப்பான நிகழ்ச்சிகள் பலப்பல.

★

# இலங்கைப் பயணம்.

புலவர் சண்முகனார் தமிழாசிரியராகவும் சங்கப் புலவராயுமிருந்த காலத்தில் வெளியீடுகளின் வாயிலாக அவர் வரைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் இலங்கைத் தமிழன்பர்களின் மனதை ஈர்த்தன. அவர்கள் சண்முகனாரை ஒருமுறை வரவழைக்க வேண்டுமென விரும்பினர். அவரை நேரிற் காணவும் அவருடைய சொற்பொழிவைக்கேட்கவும் யாழ்பாணத்தில் இலக்கிய மாநாடு ஒன்றைக் கூட்டினர். அவர்களின் சார்பில் மேலைப்புலலோலி கதிரைவேற்பிள்ளை என்னும் புலவர் நம் சண்முகனாருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பினார். அவ்வழைப்பை ஏற்றுக்கொண்ட நம் புலவர் 1908-ம் ஆண்டு புறப்பட்டு இலங்கை நாட்டிற்குச் சென்றனர். அவ்விலக்கிய மாநாட்டில் தலைமை தாங்கவேண்டியவர் நம் சண்முகனாரே. மாநாட்டுக் குழுவினர் தலைவரை வரவேற்கப் புகைவண்டி நிலையத்திற்கு விருதுகளுடன் சென்றனர். சண்முகனாரோ வண்டியைவிட்டிறங்கியதும் நேரே மாநாட்டுப் பந்தலுக்குப் போய்விட்டார். புகை வண்டி நிலயத்தில் வரவேற்கக் காத்திருந்தவர்கள் "தலைவர் சண்முகனார் இன்னும் வரவில்லையே! காரணம் என்னவோ" எனக்கவலையுடன் கூறிக்கொண்டிருந்தனர்.

நேரே மாநாட்டுப் பந்தலில்வந்து ஓர் புறம் அமர்ந் திருந்த சண்முகனாரைப் பார்த்து அருகில் இருந்த ஒருவர் ஐயா ! நீவிர் யாவர் ? என்று உசாவினர். அதற்கு விடை யாக நம் சண்முகனார் "யாமதுரையோம்" என்றனர்.

இத்தொடர், யாம் அது உரையோம் எனவும் யாம் மதுரையோம் எனவும் இருபொருள்பட (சிலேடையாக) அமைந்திருத்தலைக்கண்ட ஈழத்தவர் இவர் தான் சண்முகனூர் போலும் என ஐயுற்றூர். உடனே புகை வண்டி நிலையத்திற்கு விரைந்தார். ஆங்குக் காத்திருந்த அனைவரையும் அழைத்துவந்தார். வந்தவர்கள் இவர்தான் சண்முகனூர் என அறிந்து மகிழ்ந்து வரவேற்றுத் தலைமை தாங்க அழைத்துச் சென்றனர்.

சண்முகனூர் தலைமை தாங்கித் தமது முன்னுரையை நிகழ்த்திவிட்டு மற்ற நிகழ்ச்சிகட்கு இடந்தந்து இருக்கை யில் அமர்ந்தார். அவருடைய கண்கள் அவைக்கண் உள்ளாரை நோக்கிய வண்ணமிருந்தன. ஆங்கு ஒரு பக்கத்தில் உடல் பருத்த வணிகர் ஒருவர் கையில் விசிறி ஏந்தி வீசிக்கொண்டிருந்தார், அவருடைய சிந்தை எங்கோ திரிந்துகொண்டிருந்தது, சொற்பொழிவு நிகழ்ச்சி யில் அவர் கருத்தில்லாதவராய்க் காணப்பட்டார். அவரைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்த சண்முகனூர் என்ன ஐயா! 'கல்விக்கிரகத்திற்கு வியர்க்குமோ?' என அவரைப் பார்த்து ஓர் கேள்விகேட்டார். அவ்வளவு தான்! கேள்விக்கு அவரால் விடையொன்றும் கூற முடியவில்லை. சற்றுத் திடுக்கிட்டவராய் விசிறியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார், புலவர் வினவியதில் உள்ள இரு பொருள் கொண்ட தொடர் அவ் வணிகரைத் திருத்தியது. அத்தொடர் கல் விக்கிரகத் திற்கு (கற்சிலைக்கு) எனவும், கல்விக் கிரகத்திற்கு

(கல்விக்கு இடமான வீட்டிற்கு) எனவும் சிலேடையாக நின்று சுவை பயப்பதை அறிந்து அளவிலா மகிழ்ச்சி யடைந்தனர் அவையோர்.

இங்ஙனம் இலங்கை நாட்டில் இரண்டோராண்டுகள் தங்கிப் பல ஊர்கட்கும் சென்று சொற்பொழிவாற்றி அன்பர்களை மகிழ்வித்தார் சண்முகனார். ஆங்காங்குச் சென்றபோது அவர் தம் நெருங்கிய நண்பராகக் கதிரை வேற் பிள்ளை உடனிருந்து உதவினர். புலவர் சண்முகனார் 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதற் கிணங்கப் போனவிடமெல்லாம் புகழ் அடைந்து திகழ்ந்தார். அவரது புலமைத்திறன் அறிந்து சில புலவர் பொறாமை கொள்ளவும் செய்தனர். அவருள் அம்பல வாணப் புலவர் என்பாரும் ஒருவர். அவர் நம் சண்முக னாருடன் புலமைப் போர் தொடுக்க எண்ணினார். தோகை விரித்தாடும் மயில்முன் வான்கோழி எம்மாத்திரம்? சண்முகனாரின் புலமையாழத்தை யுணர ஒருநாள் அம்பல வாணப் புலவர் அவரிடம் போந்து உரையாடிப்பார்த்தார். அந்த முதல் நாளிலேயே சண்முகனாரின் அறிவாற்றலின் மிகுதியை அவர் அறிந்துகொண்டார். விடைபெற்றுச் சென்ற அவர் மீண்டும் சண்முகனாரிடம் வரவேயில்லை. மறைந்திருந்தே தம் குறும்புத்தனத்தைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தினார். சண்முகனாரின் புலமையைக் குறித்து, தாழ்வாகப் பேசியும், எழுதியும் வரலானார். ஒரு சமயம் வெளியீடு ஒன்றில் அவர் தம்மை வைது கட்டுரை வரைந் திருப்பதைச் சண்முகனார் கண்டார். கண்டதும் அம்பல

வாணருக்குத் தக்க அறிவு கொளுத்த வேண்டுமென எண்ணினர். உடனே "பலவித வைதலை மேற்கொண்டொழுகும் ஈழத்தம்பலவாணர் தம் பாழத்தம்பல பொதிந்த கட்டுரை" என்னும் தலைப்பில் இரு பொருள் படக்கவியொன்றெழுதி விடுத்து அச் சிறு குணமுடையோரின் செருக்கையடக்கித் தம் தாயகத்திற்கு மீண்டு வந்தார். அவர் "பலவித வைதலை மேற்கொண்டு" எனக் குறித்த தொடர் பல விதவை எனவும், பலவித வைதலை எனவும் பொருள்கொள்ளுமாறு அமைந்திருத்தல் கண்டு இன்புறத்தக்கதாம்.

தமிழகம் மீண்ட புலவர் சண்முகனாருக்கும் வேறு ஒரு பெரும் புலவருக்கும் இலக்கணத்தில் வரும் "உம்மை"யைக் குறித்துக் கருத்து வேற்றுமை எழுந்தது அதைப்பற்றி இருவரும் வரைந்த தடைவிடைக் கட்டுரைகள் வெகு நாட்களாக வெளியீடுகளில் வந்து கொண்டிருந்தன. இந்தப் புலமைப் போராட்டத்தைத் தமிழ் நாட்டுப் புலவர் பலர் தவறாது பார்த்து வந்தனர். இறுதி வெற்றி நம் சண்முகனாருக்கே கிடைத்தது. அவர் தம் மறுப்புரையை முடிக்கும்போது அம்மறுப்புக்குரியாரை முன்னிலைப்படுத்தி "இதுகாறும் உம்மை நிலையறியா திருந்த நீவிர் இனியாவது உம்மைநிலையறிவீராக" என வரைந்து அறிவு கொளுத்தினர் இதில் "உம்மை" இலக்கணத்தினை அறியாது இருந்த நீவிர் இனியாவது உம்மை (நின்னை) உற்ற குறைபாட்டை அறிவீராக" என்ற ஓர் பொருளும் பொருந்திநிற்றல் கருதத்தக்கதாம்,

## இறுதிக் காலம்

இவ்வாறு புலமையிற் சிறந்து நின்ற நம் சண்முகனூர் சில சமயங்களில் வறுமையாலும் வாடியிருக்கிறார். எல்லையற்ற கடன் தொல்லையால் அவர் நலிவுற்றதுண்டு. "துன்புளதெனினன்றோ சுகமுளது!" எனும் கம்பர் வாக்கைக் கருத்துட் கொண்டவராதலால் இன்னலிலும் இன்பங் காணுமியல்பு அவரிடம் இருந்தது. புலவர்கள் வறுமையுற்றால்தான் அவர் தம் புலமை வெளியாகும் என்பர் சிலர். இக்கருத்துக்குத் துணைசெய்வதாக நம் புலவரின் கடிதம் ஒன்று காணப்படுகிறது. அதன்கண் அவர் வரைந்துள்ளதைக் காண்போம்.

"கடன் என்னும் சுயோதனனால் ஊக்கமென்னும் நாடிழந்து சஞ்சலம் என்னும் காட்டில் மதியென்னும் பாஞ்சாலியுடன் பொறி என்னும் பஞ்சவர் கூட்டமாகிய யான் அலைந்துதிரிந்தமை தாங்களும் அறிந்ததொன்றே. இவ்வாறு நிகழ்காலைத் தங்களைப் பிரிந்து இங்குற்றபின் ஐப்பசி முதல் கரந்துறைநேரத் திண்டுக்கல் எனும் விராட நகரத்து ஒரு மகமதியக் கனவானிடத்துத் தங்கி அக் கனவானுக்கு ஏக்கர் 5½ உள்ள நஞ்சையை ரூ. 3058க்குக் கிரயஞ் செய்ததும், வேறு சில நஞ்சையை ரூ. 2000க்கு ஒத்தி வைத்ததும், பத்திரம் எழுதிக் கரந்துறை விடுத்து வெளிப்பட்டுப் பின் கார்த்திகை முதல்தேதி முதல் 15ம் தேதிவரை உத்தியோகப் பருவமும் நடத்தினேன். இப் போது 18 நாட்போரும் முடிந்தது. சுயோதனனும் துடைமுறிந்து வீழ்ந்தான். இன்னும் உயிர்போகவில்லை.

சீக்கிரம் போம். (ரூ. 5000 வரை கடன் தீர்த்தும் இன்னும் ரூ. 800 இருத்தலால் இவ்வாறு உருவகப்படுத்தலானேன்) போயபின் நூலாராய்ச்சி என்னும் முடிசூட்டும் நடக்கும். நடந்தால் ஊக்கனுட்சியில் தொல்காப்பியப் பயிர் தழைத் தோங்கலும் உண்மையே!''

இக்கடிதம் அவருடைய நண்பர் ஒருவருக்கு எழுதப் பட்டது. இதில் புலவர் சண்முகனார் தமது வாழ்வையே பாரதக் கதையாக உருவகப்படுத்தி யிருக்கிறார். தமது ஐம்புலன்களையும் பஞ்சபாண்டவர்கள் என்கின்றார். பாண்டவர்களுக்குத் துரியோதனன் பகைவன். அதுபோல் சண்முகனுருக்குக் கடன்காரன் துரியோதனன் ஆகிறன். ஐவரும் நாடிழந்ததுபோலப் புலவர் ஊக்கமென்னும் நாடிழந்தார். அறிவைத் "திரௌபதி'' என்னும் பெண்ணாக்கி அவளோடு சஞ்சலம் என்னும் காட்டிலே சண்முகனார் தலைமறைவாகக் காலங்கடத்துகிறார். பின்பு திண்டுக்கல்லை விராட நகரமாக்குகின்றார். ஆங்குள்ள ஓர் மகமதியச் செல்வந்தரால் தம் கடன் தொல்லை ஓரளவு நீங்கப் பெறுகிறார். அதன் பின் உத்தியோகப் பருவத்தை யும் நடத்துகிறார். மேலும் கடன்காரன் என்ற துரியோ தனின் துடைமுறிந்து கீழே விழுந்த பிறகு "ஊக்கம்'' என்னும் இந்த நாட்டிலே நூலாராய்ச்சியாகிய முடிபுனை விழாவும் நடைபெறும் என்று கூறுகிறார். அதன் பின்பு விளையும் பலனையும் கடிதத்தின் இறுதியிற் கூறிவிடுகின்றார். அப்பயன்தான் "தொல்காப்பிய விருத்தி'' என்னும் பயிர் அந்த ஆட்சிக் காலத்திலேயே தழைத்து வளரும் என்கிறார். புலவர் சண்முகனருக்குக்

கடன் தொல்லை நெருக்கிக்கொண்டிருந்த காலத்திலும் தமிழின் தலைமையான தொல்காப்பியத்திற்கு விருத்தி எழுதி முடிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது அரியவற்றுள் எல்லாம் அரிதன்றோ !

அரசஞ் சண்முகனார் இறுதியாகத் தமிழ்ப்பணி ஆற்றிய இடம் "லெக்சிகன்" என்னும் தமிழகராதி தொகுக்கப்பட்டு வந்த அலுவலகம். அது அந்நாளில் மதுரையில் இருந்து வந்தது. அப்பணியைத் தொடங்கிக் கண்காணித்து வந்தவர் ஒரு ஆங்கிலப் பாதிரியார். அவர் நம் அரசஞ் சண்முகனாரை ஆசிரியராக அமர்த்திக் கொண்டு அதற்குரிய ஊதியத்தையும் அளித்து வந்தார். சண்முகனார் இறைவன் இணையடி யெய்திய பிறகே அவ்வலுவலகம் மதுரையினின்றும் சென்னைக்குக் கொண்டு போகப்பட்டது. அப்புலவர்பெருமான் நீண்ட நாள் இருந்திருப்பாராயின் இன்னும் எத்தனையோ சிறந்த தமிழ்ப் பனுவல்களை ஆக்கித் தந்திருப்பார். ஆனால் அவர் இவ்வுலகில் வாழ்ந்தது நாற்பத்தேழு ஆண்டுகள் தாம். இவ்வளவு குறுகிய காலத்தில் அவரைப்போல் பெருகிய புலமையுடன் தமிழ்த் தொண்டு புரிந்தவர் அரியர். தன்னேரில்லாத் தமிழ்ப் புலவராய அரசஞ் சண்முகனார் 1915-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் பத்தாம் நாள் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகம் சேர்ந்தார். அவருடைய புலாலுடம்பு மறையினும் புலமைச் செல்வமாகிய உடம்பு நம்மிடையே புகழ்பூண்டு நிலவுகின்றதன்றோ !

---

அ.மா.ப.